வெற்றிமணி வெளியீடு 36

Free Circulation

# சிவத் தமிழ்

அகமும் புறமும் ஆலயம் அமைப்போம்

2023



## மாணிக்கவாசகரும் மகளிர் பாடல்களும்

- கவிஞர்.வி.கந்தவனம்.



மணிவிழாக் காணும்
பக்குவத்திருமணி
ஆறுமுக.பாஸ்கரக்குருக்கள்

## நவராத்திரி

பிரதம ஆசிரியர்

வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் B.F.A





Jaffna SUPER.MARKT

ANNIVERSARY CELEBRATIONS 4th ANNIVERSARY



பக்குவத்திருமணி
சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்
அவர்களின் மணிவிழா
சிறக்க வாழ்த்துகள்

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 19 2023 இதழ் 36

19 வது ஆண்டில் சிவத்தமிழ்...

ஆரம்பம் 2004



பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
0049 163 199 2333
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
"இலக்கியச் செம்மல்"
இந்து மகேஷ்



Published by
Vettimaniy Ltd U.K








# கடவுள் என்ன அடியவர்களின் அடியாளா?

குளித்து நெற்றியில் திருநீறு பூசி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து ஆலயம் செல்லவேண்டும். ஆலயத்தில் வீண்வார்த்தைகள் பேசல், குப்பை போடல், மூக்குநீர் சிந்துதல், இப்படி ஆலயம் செல்வது பற்றி சிறுவயதில் படித்தும் கேட்டும், இருக்கின்றோம்.

இது வெளியே யாவரும் பார்க்கும் வண்ணம் பொது விதியாக இருந்தது. ஆலயத்தில் ஆளுக்காள் வணங்கும் முறைகள் வேறாக இருப்பதை சிறுவயதில் எமக்கு எட்டியவரை கண்டு இருக்கின்றோம். ஒன்று கண்கலங்க நிண்டநேரமாக வணங்குவதும், பித்து பிடித்தவர்கள் போல் உருகி உருகி ஆண்டவனுடன் கதைப்பவர்களையும்.

மற்றையவர் ஆலயத்திற்கு வந்தார், மூன்று சுற்று சுற்றினார், இரு கைகளையும் தூக்கி வணங்கினார், நெஞ்சில் கை வைத்து மீண்டும் ஒரு முறை ஆண்டவனை பார்த்தார், அருகில் உள்ளவர்களைப் பார்த்து புன்னகைத்தார், புறப்பட்டார்.

அடுத்து ஒரு வகையினர் கோவிலுக்குள் வராமல் வாசலில் நின்று ஒரு நிமிடம் வணங்கிவிட்டும், சிலர் ஈருறுளியில் இருந்து இறங்கியும், அல்லது ஒற்றைக்கால் ஊன்றி நின்று வணங்கியும், அதிலும் ஒரு சிலர் ஓடிக்கொண்டே இறங்காமல் ஈருறுளி இருக்கையில் இருந்து தமது பின்புறத்தை சற்று உயர்த்தி, வலது கையை நெஞ்சில் வைத்தபடியும், விலகுவார். இவையாவும் இறைவனை வணங்கும் புறக்காட்சிகள்.

அகக்காட்சிகள் பற்றி எவருக்கும் தெரியாது, அவர்களாக உணர்ச்சி மேலீட்டால், ஆர்வமிகுதியால் சொன்னால், அல்லது ஆண்டவனுக்கு சத்தமாகச் சொன்னால் மட்டுமே பிறர் அறியமுடியும். அதிகமான அடியவர்கள் கடைக்கு பொருட்கள் வாங்க ஒரு பட்டியல் போடுவது போல், தன்குடும்பத்திற்கு "இவற்றைச் செய் ஆண்டவா!" என பட்டியல் போட்டு வேண்டுவர்.

அதில் பிள்ளைகளின் சுகம், கல்வி, வேலை, திருமணம் என்பன கட்டாயமாக இருக்கும். இது யாவருக்கும் உள்ளதுதான். ஆனால் சில வேண்டுதல்கள் தமக்கு பிடிக்காதவர்களுக்கு "அவர்களுக்கு நல்ல அடி விழவேண்டும்!, எழும்பேலாதபடி". இன்னும் ஒரு படி மேலே, "அவர்களுக்கு இந்த நோய் வந்து வாட்டவேண்டும்", என வேண்டுவர். தற்செயலாக அவ்வாறு நேரிட்டு விட்டால், "நான் ஆண்டவனை மெய் நொந்து கேட்டானான், ஒரு வருடத்திற்குள் காட்டி விட்டான். கடவுள் இருக்கிறார்" என்று நண்பர்கள்களுக்கு, ஆர்வக்கோளாறால் சொல்லியும் திரிவார்.

பலர் தனக்கு ஒரு கண்போனாலும் பறவாய் இல்லை அவனுக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்று கடவுளை கேட்பார்கள். தனக்கு தன் குடும்பம் நல்லா இருக்க வேண்டும் என்று ஆலயத்தில் வேண்டுபவர்களை விட, வெளியே இருந்து "கடவுளே அவர்களுக்கு இப்படிச் செய், அப்படி செய்" என்று வேண்டுபவர்களும் உண்டு.

நல்ல மழை வந்து நெற்கதிர் எல்லாம் நாசமாக வேண்டும் என்று நேற்று நினைத்தவர்களும் உண்டு.

இன்று நல்ல மழை வந்து அவர்கள் திருவிழாவைக் குழப்ப வேண்டும் என்று நினைக்கும் அடியார்களும் உண்டு.

ஒருவருக்கு ஒருவர் சண்டை சச்சரவு வரும் போது, இந்த அந்தரங்க வேண்டுதல்கள் அம்பலமாகும்.

அட கடவுளே! அப்படி என்றால் கடவுள் என்ன அடியவர்களின் அடியாளா?




இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்.

காலையில் கண்விழித்தது முதல்,இரவு உறங்கப் போனதுவரை நிகழ்ந்தவைகள் யாவும் மனத்திரையில் வெறும் காட்சிகளாய்த் தெரிகின்றன. வழக்கம்போல நடக்கும் நாளாந்தக் காரியங்களை நிகழ்த்தி முடித்த ஒரு நாளாகவே நேற்றையப் பொழுதும் போய் மறைந்திருக்கிறது.

முற்றுமுழுதாய் என்னென்ன நடந்தது என்பதை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை ஒப்புவிக்க முடியாதபடி சில நிகழ்வுகள் மறந்து போயிருந்தன. உண்டேன் உடுத்தினேன் என்பது தெரிந்திருந்தாலும் என்ன உண்டேன் என்ன உடுத்தினேன் என்பதைக்கூட சற்று நினைவுபடுத்தித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அப்போதும் அவைகளைச் சரியாகச் சொல்லியிருக்கிறேனா என்பதை உறுதியாகச் சொல்லமுடியவில்லை. மனதின் நினைவுப் பக்கங்களில் எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகப் பதித்து வைக்க முடியாதபடி ஏதோ ஒரு மாயை இடையூறு செய்கிறது.

இப்படியே இன்றையப் பொழுதும் முற்றுமுழுதாய் நினைவில் தங்காமல் நாளையப் பொழுதில் கனவாய்க் கலைந்து விடப்போகிறது.

நிகழ்காலம் என்பது இறந்தகாலமாய் தன்னை மறைத்துக் கொண்டு விடுகிறது.
“என்ன இந்த வாழ்க்கை?”

தாம்தாம் கற்றறிந்தவரையில் இதுதான் வாழ்க்கை என்று தேர்ந்தெடுத்த வழியிலேயே ஒவ்வொருவரும் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### “இந்த வாழ்க்கையின் முடிவெங்கே?”

“இது தெரியாதா? எல்லோர்க்கும் தெரிந்த ஒரே பதில்தானே இது! மரணம்தான் இந்த வாழ்க்கையின் முடிவு!”

-பொதுவாக எல்லோரும் சொல்கிற விடைதான் அது.
“மரணத்தோடு இந்த மண்ணுலக வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனில் இத்தனைகாலம் வாழ்ந்த வாழ்வுக்கு அர்த்தம்தான் என்ன?”

இந்தக் கேள்விக்குள் ஆழ்ந்துபோகும் மனிதனுக்கு முகம்காட்டுகிறான் இறைவன்.

### முடிவும் முதலும் நான்தான்!

இறைவனும் நானும் ஒன்றென இரண்டறக் கலந்துவிடும் மனிதன் மறுபடி இந்த மண்ணுலக மாயைகளில் சிக்கிக் கொள்வதில்லை. அதனால் நான் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்டேன் என்று அவன் வந்து சொல்லிக் கொள்வதுமில்லை. அப்படிக் கண்டதாகச் சொல்லிக்கொள்பவன் உண்மையில் இறைவனைக் கண்டது மில்லை.

அதனால்தான் கண்டவர் விண்டிலர் என்றும் விண்டவர் கண்டிலர் என்றும் அன்று சொல்லி வைத்தார்கள்.

தனியாக வந்து தனியாகவே போய்மறைந்துவிடும் இந்த வாழ்வில் இத்தனை உறவுகள் எதனால் வந்தன? பற்று பந்தம் பாசம் என்று கட்டிக்கொண்ட உறவுகளால்தான் இந்த மாயா உலகத்தின் வண்ணங்களைக் காணமுடியும். இந்த வண்ணங்கள் கலைந்துபோகும்போது ஒவ்வொருவரும் ஞானம் பெறமுடியும் என்று வாழ்வின் விதியை வகுத்துத் தந்திருக்கிறது இயற்கை. ஞானத்தின் எல்லையில் முக்தி தரும் வீடு. அந்த வீடுபேறடைய எம்மை வலிந்து துரத்தும் உறவுகள்.

உறவுகள் பெருகப் பெருக உலகத்தின்மீதான பற்றுதல் மெள்ள மெள்ளக் கரையும். இந்த உண்மையை நாம் உணராது போனாலும் காலம் அதை உணர்த்தும். பிறப்புக்கு முன்பு எங்கிருந்து வந்தோம் என்ற கேள்விக்கு அப்போது விடைகிடைக்கும். உடலெனும் கூட்டுக்குள் நாம் வந்தமர்வதற்கு முன்பு எந்த வீட்டில் உலாவித் திரிந்தோமோ அந்த வீடு பற்றிய தெளிவு வரும்.

மறுபடி அந்த வீடுபெற வேண்டும் என்ற ஞானம் துளிர்க்கும். இந்த உடற்கூட்டை எறிந்துவிட்டு அந்த வீட்டுக்குப் போய்விட உயிர் தவிக்கும்.

அந்த வீடுவரை எம்மை அழைத்துச் செல்லவே இந்த உறவுகள்!



”என் பெற்ற தாயாரும் என்னைப் பிணமென்று
இகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போமென்று சொல்லிப்
புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து
குடமுடைத்தார்
உன்பற்று ஒழிய ஒருபற்றும் இல்லை
உடையவனே!”

(பட்டினத்தார்)

## மாணிக்கவாசகரும் மகளிர் பாடல்களும்

# திருவாசகத்தில் வருகின்ற பெண்கள்

## யாவரும் ஆன்மாக்கள்.

மாணிக்கவாசகரும் மகளிர் பாடல்களும்





கன்னிப் பெண்கள் தங்கள் வருங்கால வாழ்க்கைபற்றிய கருத்துடையவராதலால் நல்ல கணவர் தமக்கு வரவேண்டும் என்று நினைத்திருப்பர். பிறருக்குக் கேட்குமாறு வரம் கேட்பது பெண்கள் இயல்பில் இல்லை. நினைத்தார்களோ இல்லையோ மாணிக்கவாசகர் அவர்களுடைய வாழ்க்கை நல்லவண்ணம் அமைய வேண்டும் என்று தாமே வேண்டுகிறார்.

– கவிஞர் வி. கந்தவனம்

நாயன்மார்களில் மகளிர் பண்பாட்டை நயமுறப் பயன்படுத்திப் பக்தியை வளர்த்தவர் மாணிக்கவாசகர். திருவாசகத்தில் வரும 51 பதிகங்களில் 11ல் பெண்களைக் கொண்டு இறைவன் பெருமையை உலகத்தாருக்கு உணர்த்தும் பணி ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. இவற்றில் எட்டுப் பதிகங்கள் ஆடல்களோடு கூடியவை.

பெண்கள் முதன்மை பெறுகின்ற ஒரு பதிகம் திருவெம்பாவை. திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் தங்கியிருந்த காலத்தில் இளம் பெண்கள் அதிகாலையில் துயில் நீக்கி எழுந்து நீராடச் செல்வதைக் கண்டிருக்கின்றார். காணுகின்ற காட்சிகள் அனைத்தையும் சிவகாட்சிகளாகவே காண்கின்ற பக்குவம் பெற்ற அவர், பெண்கள் தங்கள் மலம் கழுவ எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கும் மடுவுக்குச் செல்வதாகவே காண்கின்றார்.

காட்சி அற்புதமான திருவெம்பாவைப் பாடல்களாக அவர் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது. அதில் பெண்களைக் கொண்டு சிவனுடைய பெருமையைப் பேசவைக்கின்றார். சைவசித்தாந்த முப்பொருள் உண்மைகளை விளக்குகின்றார். பசு பாசங்களைக் களைய முனைவதும் பதியை அடைய விழைவதும் எமக்கும் பாடங்களாகின்றன. அவற்றில் முக்கியமான ஒரு பாடம் இது:

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோம் ஏலோர் எம்பாவாய்.

இதிற் சைவப் பெண்கள் பின்பற்ற வேண்டிய பண்பாட்டை முன்வைக்கின்றார் மணிவாசகப் பெருமான். சைவப் பெண்கள் சிவனடியார்களையே மணம்புரிய வேண்டும் என்கிறார். அவ்விதம் செய்தால் என்ன குறையும் இல்லாமல் அவர்கள் வாழ்வார்கள். சிவனடியார்கள் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள் ஆதலால் இல்லற வாழ்க்கை இணையற்ற வாழ்க்கையாக அமையுமன்றோ. இதனையே 'மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பார்' என்றார் திருமூலநாயனாரும்.

பெண்கள் நீராடியபின் அண்ணாமலையானை வணங்கிய காட்சிகளைத்தான் மாணிக்க வாசகர் கண்டிருக்கின்றார். அவர்கள் இறைவனிடம் என்ன கேட்டார்கள் என்பது அவரது திருச் செவிகளுக்கு எட்டியிருக்க வாய்ப்பில்லை.

சைவம் வளர்வதற்குப் பெண்களின் பங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்று அவர் கருதுகின்றார். அந்தப் பங்களிப்பை அவர்கள் செவ்வனே செய்யவேண்டுமானால் அவர்களுக்கு நல்ல கணவர் வாய்த்தல் வேண்டும். அக் கணவர் சிவனடியாராக இருந்தாலே அது சாத்தியமாகும். இதே கருத்து 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று தொடங்கும் பாடலிலும் வலியுறுத்தப்படுகின்றது.

கன்னிப் பெண்களும் அவர்களது பெற்றோரும் இதுபற்றிச் சிந்தித்துச் செயற்படின் எமது சமுதாயம் இப்பொழுது இருப்பதிலும் சிறப்புறும் என்பது உறுதி.

தொடர்ந்து வருவது திருவம்மானைப் பதிகம். அம்மானை என்பது ஒருவகை மகளிர் விளையாட்டு. இதிற் பெண்கள் மரப் பந்துகளை உயர எறிந்து ஏந்திப் பிடிப்பர். இந்த ஆடலில் பாடப்படும் பாடல் அம்மானை வரி எனப்படும். சக்தியைப் பற்றிய அல்லது பெண்களைப் பற்றிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் அம்மானைப் பருவம் என்ற பகுதி ஒன்றுண்டு. அது பெண்குழந்தையை அம்மானை ஆட அழைக்கின்ற பருவமாகும். அந்த அளவுக்கு அம்மானை விளையாட்டுத் தமிழர் மத்தியில் அக்காலத்திற் பிரபலியமாக இருந்தது. அப்படி ஒரு விளையாட்டையும் திருவண்ணாமலையில் இருந்த காலத்திலே மணிவாசகப் பெருமான் பார்த்திருத்தல் வேண்டும். அதனையும் இறைவன் புகழைப் பாடுவதற்குப் பயன்படுத்தியிருக்கின்றார். நிலத்தில் வந்து தங்களை ஆட்கொள்ளும் இறைவனின் கருணையை நினைந்து பெண்கள் பாடுவது கவனிக்கத் தக்கது.

அடுத்து இடம்பெறுவது திருப்பொற்சுண்ணம். இது ஓர் உரற்பாட்டு. உரலில் நெல் குற்றுவது, மா இடிப்பது எமது பெண்கள் கிராமப் பறங்களிலே இன்றும் செய்து வருகின்ற இல்லறத் தொழிற்பாடாகும். சுண்ணம் என்பது பொடி. மகளிர் குளிப்பதற்கும் குளித்தபின் தம்மை அலங்கரிப்பதற்கும் பலவகையான பொடிகளை உரலிலே இடித்துத் தயாரிப்ப துண்டு. திருப் பொற்சுண்ணத்தில் இறைவனை அலங்கரிக்கப் பெண்களைக் கொண்டு வாசனைப் பொடி இடிப்பிக்கின்றார் மாணிக்கவாசகர். பொடி பொன்னிறமாதலால் பொற்சுண்ணம் எனப்பட்டது. பொற் சுண்ணத்தை இடிக்கையில் பெண்கள் தனு கரண புவன போகங்களை இறைவனுக்குச் சுண்ணமாக்கு கின்றனர் என்பது தத்துவம்.

மற்றுமொரு மகளிர் ஆடல் தெள்ளேணம். மகளிர் தோள்கொட்டிச் சுழன்று சுழன்று பாடி ஆடுகின்ற விளையாட்டு. திருத்தெள்ளேணம் மகளிர் சிவன்சீர் பாடி அவனைச் சென்று கூட விரும்பும் வகையிற் பாடப்பட்டுள்ளது.

திருத்தெள்ளேணத்தை அடுத்து வருவது திருச்சாழல். சாழல் என்பதும் ஒருவகை மகளிர் விளையாட்டாகும். இந்த விளையாட்டைச் சிவனது அருட்சத்தியை உணர்த்த மணிவாசகப் பெருமான் பயன்படுத்தியுள்ளார்.

திருச்சாழற் பதிகத்தைத் தொடர்ந்து இடம்பெறுவது திருப்பூ வல்லி என்ற பதிகம். பெண்கள் பூக்களைக் கொய்கையிற் பாடுவதாக அமைந்த இப்பதிகம் மாயையின் சக்தியைத் தடுத்து நிறுத்துதல், சிவபிரான் தேடிவந்து ஆண்ட நலம்சொல்லி வியத்தல் முதலியவை கூறப்படுகின்றன.

அடுத்து வருவது திருவுந்தியார். உந்துதல் என்ற சொல்லுப் பல பொருள்களையுடையது. அவற்றில் ஒன்று தள்ளுதல் என்பது. இதில் மகளிர் தமது கைகள் இரண்டையும் சேர்த்து ஒருவரை ஒருவர் தள்ளி (உந்தி) விளையாடுவர். உந்தி பறத்தல் என்றும் இது அழைக்கப்படும்.

திருத்தோள் நோக்கம் என்பதும் ஒரு மகளிர் விளையாட்டாகும். இதில் மகளிர் ஒருவர் தோளை ஒருவர் பார்த்தும்(நோக்கியும்) தொட்டும் விளையாடுவர். திருத்தோள் நோக்கத்தில் திருவருளோடு ஒன்றிநிற்கும் திறம் வெளிப்படுத்தப்படுதலைக் காணலாம்.

தொடர்ந்து வருவது திருப்பொன்னூசல். ஊசல் என்பது ஊஞ்சல். இதில் மகளிர் ஊஞ்சல் ஆடியவாறு இறைவனின் அருள் திறத்தை வாயாரப் பாடுகின்றார்கள்.

இதனைத் தொடர்ந்துவரும் அன்னைப் பத்து, குயிற் பத்து ஆகிய பதிகங்கள் சற்று வித்தியாசமானவை; ஆடல்கள் இல்லாதவை;

பல பெண்களின் பங்களிப்பும் இல்லாதவை. அன்னைப் பத்தில் தனியொரு பெண் தலைவன்பால்(இறைவன்பால்) தன்னை இழந்து பாடுகின்றாள். குயிற் பத்தில்,



**கீதம் இனிய குயிலே கேட்டியேல்**
**எங்கள் பெருமான்**
**பாதம் இரண்டும் வினவின் பாதாளம்**
**ஏழினுக் கப்பால்**
**சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து**
**நின்ற தொன்மை**
**ஆதி குணம் ஒன்றும் இல்லான்**
**அந்தமிரான் வரக் கூவாய்**

என்று சிவனோடு கூடும் குறிப்புடன் ஒரு பெண் குயிலைத் தூது விடுகின்றாள்.

திருவாசகத்தில் வருகின்ற பெண்கள் யாவரும் ஆன்மாக்கள். ஆன்மாக்கள் இறைவனைச் சேரவிழையும் செயற்பாடு களையே மணிவாசகப் பெருமான் மிக உருக்கமாகப் பாடியருளியிருக்கின்றார்.

ஆன்மாக்களைப் பெண்களாக உருவகப்படுத்தாத ஏனைய இடங்களில் மாணிக்கவாசகர்தாம் பெண்.

அவர் இறைவனை அடையத் துடிக்கும் காதலே திருவாசகம்.

### சாரதிகளின் கவனத்திற்கு....

# அதிகரிக்கும் வீதி விபத்தும் முறிகண்டிப் பிள்ளையாரும்

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை (A9) வீதியில் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் வாகனங்கள் நிறுத்தப்படாமையும் ஒரு காரணம்.'

வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் ஏறக்குறைய 150 KM தூரத்தில் உள்ளது. வவுனியாவிலிருந்து திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் ஏறத்தாழ 75 KM தூரத்திலுள்ளது.

அதாவது முறிகண்டி வவுனியாவுக்கும் யாழ் நகருக்கும் இடையே ஏறைக்குறைய மத்தியில் அமைந்த பிரதேசம். எனவே வாகன சாரதிகள் அதிக தூக்கத்தை போக்கி களைப்பு, சோர்வு, அசதி, மன உளைச்சல் இவைகளை களைந்து முகம் கழுவி பிராத்தனை செய்து உணவுண்டு செல்லும் போது, மீண்டும் புத்துணர்ச்சியுடன் களைப்பின்றி தமது பயணத்தை புதிய உத்வேகத்ததுடன் தொடர முடியும்.

இதற்குத்தான் எமது முன்னோர்கள் இது போன்ற வழிபாட்டு தலங்களை ஆங்காங்கே நிறுவினார்கள். மோட்டார் வாகன பாவனைகள் அதிகரித்துள்ள இக்காலத்தில், இவ்வழிபாட்டு தலங்களுடன் கூடிய நிறுத்துமிடங்கள் வீதி விபத்துக்களை பெருமளவு குறைக்க உதவும்.

நமது முன்னோர்களது எந்தவோர் செயலும், மிகநுட்பமான காரண காரியத்துடன், மனிதனது "நன்மை" ஒன்றை மட்டுமே கருத்திற்கொண்டு செய்யப்பட்டவையாகும்.

நன்றி: ஈழத்துவரலாறும் தொல்லியலும்:



முறிகண்டி பிள்ளையார்




## சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்

# பெரும் கோவிலைக் கோபுரத்துடன் கட்ட ஈழத்தமிழர்களுக்கு தன்னம்பிக்கையை விதைத்தவர்.



1993ம் ஆண்டில் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் வருடாந்தர உற்சவம் தெரு வீதி உலா

1989ம் ஆண்டில் ஆரம்பிக்கிறது ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய வரலாறு. ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள் இலங்கையைச் சேர்ந்தவர். 1986ல் பிரான்ஸ் செல்லும் வழியில் ஜெர்மனி ஹம் நகரில் தங்க நேரிட்டது. அவர் வாடகைக்கு இருந்த வீட்டிலேயே தன்னுடைய வழிபாட்டு அறையை அம்பாளின் கோயிலாக நினைத்து பூசைகளை செய்து வந்தார். இதை அறிந்து நாளடைவில் பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றது.




1992ம் ஆண்டில் ஹம் நகரில் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்து அந்த இடத்தில் அன்னைக்கு சிறு ஆலயம்

1989ம் ஆண்டில் நில அறையில் அன்னை காமாக்ஷிக்கு சிறு கோயில் போன்ற மாதிரி வடிவத்தை பக்தர்களின் உதவியுடன் உருவாக்கி அதிலே அன்னையை எழுந்தருளச் செய்து நாள்தோறும் பூசைகளைச் செய்து வரலானார். அவருக்கு உதவியாக குருக்களின் சகோதரர் சிவஸ்ரீ கேதீஸ்வர ஐயாவும் அன்றாட பூசைகளில் அன்னை காமாக்ஷிக்கு பணிகள் செய்து வந்தார்.



முதல் தேர் 1998

பின்னர் 1992ம் ஆண்டில் ஹம் நகரில் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்து அந்த இடத்தில் அன்னைக்கு கர்பக்கிரகம் மற்றும் பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகளை ஆலய ஆச்சாரியார்களின் உதவியுடன் அமைத்து 1992ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து அன்னைக்கு தினமும் இரண்டு நேரப் பூசைகளை செய்து வந்தார்.

வருடாந்தர உற்சவம்

1993ம் ஆண்டில் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு முதன் முதலாக வருடாந்தர உற்சவத்தை ஆரம்பித்து வைத்தார். உற்சவத்திற்காக இந்தியாவிலிருந்து குருமார்கள் வரவழைக்கப்பட்டு உற்சவம் மிகச் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. 1994ம் ஆண்டு உற்சவத்தில் முதன் முதலாக ரதோற்சவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ரதோற்சவ விழாவிற்காக இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் சிவாச்சாரியர்கள் அழைக்கப்பட்டு குருக்கள் அவர்களின் தலைமையில் ரதோற்சவ விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது சுமார் 2000 பக்தர்கள் உற்சவத்தில் பங்கேற்றனர்.

விழாக் காலங்களில் பங்கு பற்றும் பக்தர்களின் எண்ணிக்கை மென்மேலும் அதிகமாகவே சென்றது. இதன் காரணமாக இடத்தை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் மனதில் உதித்தது. ஒரு நாள் குருக்கள் கனவில் அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தோன்றி ஆலயத்தை அமைப்பதற்கான இடத்தை தெரியப்படுத்தி மறைந்தாள். அந்த இடம் ஹம் நகரிலிருந்து சுமார் 10கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருந்த ஹம் நகர்ப்புறமான உன்ரோப் எனப்படும் ஒரு சிறு கிராமம். 1996ஆம் ஆண்டு உன்ரோப் பகுதியில் Siegenbeckstraße என்ற முகவரியில் அன்னைக்கு சொந்தமாக நிலம் வாங்கி அந்த இடத்தில் சிறிய ஆலயமாக அமைத்து 1997ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேம் நடத்தினார்.

### புதிய இடம்

உன்ரோப் பகுதியில் அன்னையின் ஆலயத்தில் தினமும் இரு வேளைகள் பூசைகள் செய்யப்பட்டது 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற அம்பாளின் மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் சுமார் 10 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருள் பெற்றுச் சென்றனர். 1998ஆம் ஆண்டு அதே இடத்தில் உள்ள பெரிய நிலத்தை பக்தர்களின் உதவியுடனும் வங்கியின் கடனுதவியுடனும் வாங்கி அங்கே ஆலயம் அமைப்பதற்கு உரிய பூமி பூசை தொடங்கப்பட்டது.

ஹம் நகரில் வசிக்கும் ஹைன்ஷ் ரையன்ர் ஐஸ்கோஸ்ற் எனும் கட்டிட நிபுணரின் கட்டுமாணப் பணியுடன். ஆலய கட்டிட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்ததாக சிற்ப வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து சிற்ப கலைஞர்கள் 1999ஆம் ஆண்டு கடைசிப்பகுதியில் வரவழைக்கப்பட்டு சிற்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் இந்தியாவில் செதுக்கப்பட்டு வர வழைக்கப்பட்டது. பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் சிலைகள் யாவும் கருங்கற்களில் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. மூல விக்கிரகம் (காமாக்ஷி அம்பாள்) இந்தியா காஞ்சி காமாக்ஷி அம்பாளின் திருவுருவத்தை ஒத்ததாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

### மகாகும்பாபிஷேகம 7.7.2002

17 மீற்றர் உயரமான இராஜகோபுரமும் கட்டப்பட்டு சுமார் 18 மாதங்கள் தொடர் வேலைகளின் பின்பாக 2002ஆம் ஆண்டு 7ம் மாதம் 7ம் தேதி ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்திறகாக பல சிவாச்சாரியர்கள் இந்தியாவிலும் இலங்கையிலிருந்தும் வருகை தந்து அன்னையின் புதிய ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற சிவஸ்ரீ. ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் தலைமையில் நடத்தி வைக்கப்பட்டது.
கும்பாபிஷேகத்தின் பின்பாக அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகிறது. இன்று 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை மக்கள் தேர்க் காலத்தில் வந்து வணங்கும் ஒரு பெரும் ஸ்தலமாக இவ்வாலயம் திகழ்கின்றது.

**"கலைஞானமணி" அளவையூர் தி.லம்போதரன்**

## ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கலாச்சார மண்டபத் திறப்பு விழா 06.02.2022











படங்கள்:ஆன்மிகத்தென்றல்.த.புவனேந்திரன்,பா.நந்தபாலன்.










SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main






பக்குவத்திருமணி
சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்
அவர்களின் மணிவிழா
சிறக்க வாழ்த்துகள்





# நவராத்திரி


நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர் அவுஸ்திரேலியா


விழாக்காலங்கள் மனித மனத்திற்கு இன்பம் ஊட்டும் நாட்களாக கழியும். உழைத்து களைத்த மனதிற்கு உற்சாகம் ஊட்டுவது விழாக்கள். அதனால் தான் போலும் இயற்கையுடன் வளர்ந்த இந்து மதத்தில் விழாக்களுக்கு குறைவே இல்லை. இந்தியா பூராவும் விமரிசையாக கொண்டாடப்படுவது நவராத்திரி விழா. ஆனால் எந்த ஒரு விழாவின் பின்னணியிலும் மனித மனதை பண்பட வைக்கும் தத்துவம் இல்லாது போகாது.

நவராத்திரி இது மனிதன் வாழ்வாங்கு வாழ தேவையான அறிவு ,செல்வம், ,வீரத்தை போற்றி அதற்கான தெய்வங்களை வணங்குவது. செல்வத்தின் தெய்வமாம் லட்சுமியை வணங்கினால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை பலரிடம் உண்டு. லட்சுமி படங்களிலே தேவியின் கைகளில் இருந்து தங்க காசு கொட்டுவதாக வரையப்பட்டிருக்கும் உலக அரங்கில் நாணயத்தின் மதிப்பு தங்கத்திற்கு இணையாக மதிக்கப்படுகிறது. இந்த தங்கத்தின் மூலம் எதையும் வாங்க முடியும் ஆனால் தங்கத்தை அதிகமாக வைத்திருப்பதால் ஒரு நாடு செல்வந்த நாடாக முடியுமா? நாட்டின் செல்வம் என்பது மக்களின் வாழ்க்கை தரம், அதை நிர்ணயிப்பது நாட்டின் உற்பத்தி, உற்பத்தியை சந்தைப் படுத்துவதால் பெறப்படும் செல்வம்.

விவசாயம் மனித வாழ்வின் உயிர்நாடி. நீர் இல்லாது வரட்சி நீண்டால் விவசாயம் பாதிக்கப்படும். மழை நீரை தேக்கி வைப்பது தகுந்த முறையில் நீர்ப்பாசனம் இவை நாட்டின் செல்வம் அல்லவா. பாய்ந்தோடும் ஆறு நாட்டிடை வளம்படுத்தும். இயற்கை அளித்த செல்வம் அல்வா இது. தமிழ்நாடு காவேரி மூலம் பாசனம் பெற்று நெல் விளையும் பூமியாக செல்வச் செழிப்புடன் காணப்பட்ட பிரதேசமாக விளங்கியது. கர்நாடக காரன் அணையை கட்டி காவேரியை தடுத்தான். நாளாந்தம் அணையை திறந்து தமிழ் நாட்டிற்கு நீரை தா என கெஞ்ச வேண்டிய நிலை. இவற்றை அறியும் போது நாட்டின் செல்வம், இயற்கை வளம், என்பதை உணர முடியும். நீர்வளம்,நிலவளம், மற்றும் ஆலைகளே நாட்டின் செல்வம். இது மக்களின் வாழ்க்கை தரத்தை நிர்ணயிப்பவை. இதை உணர்ந்து தானோ என்னவோ எம் வர்கள் அஷ்ட லட்சுமிகளிலே அன்னலட்சுமிக்கு முதல் இடம் கொடுத்துள்ளார்கள். அன்னம் உணவு. உணவு கிடைக்காத எவரும் ஏழைதான்.

இவற்றை உணர்த்தும் வகையான அலங்கார பொருளாக நாம் காட்சிக்கு வைக்கும் நிறைகுடம் இதையே எமக்கு உணர்த்துகிறது. நீர் நிறைந்த குடம் நீரின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. குடத்தின் கீழே நாம் நெல் மணியை அல்லவா போட்டு வைக்கிறோம். செல்வத்தை,சிறப்பை, மங்களத்தை தருபவை. நிறைந்த நீரும் தானியமுமே நிறைந்த நீரைப் பெற்று பூமாதேவி சிலிர்த்து, செழித்து, காயும்,கனியும்,தானிய முமாக எம்மை வாழ வைக்கிறாள். அந்த மாதாவை போற்றுவது எமது மரபு. பூமியை தொட்டு வணங்குவது கீளைதேயம் அத்தனையிலும் காணப்படுவது அவளே செல்வத்தை கொளிக்கும் தாயாக எம்மை வாழ வைப்பவள். அவளே சௌபாக்கியங்களையும், தரும் லட்சுமி ஆவாள். இதுவே நவராத்திரியில் வரும் லட்சுமி ஸ்துதி ஆகும்.

கல்வி, அறிவு, ,கலைகளின் தாயாக விளங்குபவள் சரஸ்வதி

அல்லது கலைமகள். கல்வி, அறிவு எனும் போது எமது மனதில் தோன்றுவது நூல்கள், கல்லூரிகள் அவற்றால் வழங்கப்படும் கௌரவங்கள் ஆகியவையே. பண்டைய சமுதாயத்திலே இவ்வாறான கல்லுரிகள் இருக்கவில்லை , அறிஞரகளே மக்களை வழிநடத்தி அறிவுரை வழங்கினார்கள். அறிஞர்கள் வாழ்வாங்கு வாழ்வது எவ்வேறென மக்களை வழி நடத்த நூல்களை வழங்கினர். சமூகமும் மன்னரும் அவர்களை போற்றி மதித்தனர். அவ்வாறு வள்ளுவ பெருந்தகை நமக்கு அருளியதே "திருக்குறள்." ஆயகலைகள் அறுபத்து நான்கின் நாயகி சரஸ்வதி. ஆயகலைகள் யாது, சமையற் கலை முதற் குதிரையை பழக்குவது, குதிரை சவாரி, தச்சுவேலை, வாழ்வித்தை,நடனம், சங்கீதம் என கற்றுக்கொண்டு செய்பவை அத்தனையும் இதில் அடங்கும். இவற்றை குறிப்பிட்ட துறையில் விற்பன்னராக இருந்த குருவிடம் போய் அவரிடமிருந்து ,அதாவது குருகுல வாசம் செய்து கற்றுக்கொண்டனர், அல்லது தந்தை வழியாக மகன்கள் கற்றனர். இன்றோ ஆயகலைகள் பல்கி பெருகிவிட்டது. கணனி முதற்கொண்டு செயற்கை நுண்ணறிவு "ஆர்ட்டி.ஃ.பிஷியல் இன்டெலிஜென்ஸ்" என பல்கிப் பெருகி வருகிறது. சமுதாய வளர்ச்சிக்கு அத்தனையும் உறுதுணையாக உள்ளது.

நாட்டில் செல்வமும் அறிவும் இருந்தும்,தன்னை காக்கும் சக்தி அத்தியாவசியமானது ஒரு நாட்டிற்கு தன்னை காக்கும் திறன் இல்லாவிட்டால் மாற்றான் வந்து செல்வத்தை சூறையாடி செல்வான். இந்தியா செல்ல செழிப்பு மிக்க நாடாக இருந்தது. நவீன ஆயுதம் இல்லாத போது மேற்கத்தியர் வந்து நாட்டை சுறையாடவிலையா. நாட்டை காக்கும் படை பலமும் , நவீன போர் முறைகளும் அறிந்திருத்தல் வேண்டும்.

இந்த தற்காப்பு ஆயுத பலத்தையே எம்மவர் காளி ரூபத்தில் கண்டார்களா? . எமது பண்டைய மன்னர்கள் போருக்கு போகுமுன் கொற்றவை என்ற பெண் தெய்வத்தையே வணங்கி போருக்கு போனார்கள் என்கிறது நமது பண்டைய சங்க இலக்கியங்கள். ஆரிய மத கலப்பு ஏற்பட்டபோது கொற்றவையே காளி அல்லது துர்க்கையானாள். பத்ர காளி பல்வகையான ஆயுதங்கள் தாங்கி நிற்பாள். காலன் அவன் தான் எமன் அவளுக்கு கத்தியை கொடுத்தான். வாயு தேவன் அம்பு வில்லை கொடுத்தான் இவ்வாறாக அவளது கைகள்ளே ஒரு பெரிய படையாக தோன்ற சிங்க வாகனத்தில் ஏறிச் சென்று மகிஷன் என்ற அரக்கனை கொன்று தீர்த்ததாக புராணம் கூறும். இதுவே நவராத்திரி நிறைவு10 வதுதினம் விஜயதசமி என கொண்டாடப்படுகிறது.

இந்திய பெருங் கண்டத்தின் வெவ்வேறு மாநில மக்களும் வேறுபட்ட வகையான நவராத்திரி தினங்களை கொண்டாடு கிறார்கள். தமிழ் நாட்டவர் அழகிய கொலு பொம்மைகளை பல வருடங்களாக சேர்த்து வைத்திருப்பார்கள். நவராத்திரி விழா ஆரம்பம் ஆவதற்கு முதல்நாள் பொம்மைகளை எல்லாம் வெளியே எடுத்து சுத்தப்படுத்தப்படுத்தி படிகளை அமைத்து ,அதில் பொம்மைகளை அழகாக அடுக்கி, மறுநாள் பூஜைகளைச் செய்து ககொலுவின் முன் நவதானியங்களை விளைச்சலின் சின்னமாக விதைத்து வைப்பார்கள். கொலுவின் முன்னும் வீட்டு வாசலிலும் தினம் தினம் அழகாக கோலங்கள் இடப்படும்.நவராத்திரி விழா விசேஷமாக பெண்கள் கொண்டாட்ட மாகவே கொள்ளப்படும். உறவினர் தோழியர் இந்த தினங்களில் அழைக்கப்படுவார்.

வந்தவர்கள் கொலுவின் முன்னால் உட்கார்ந்து பாடல்கள் பாடி மகிழ்வார்கள். இந்த விழாவில் பட்சணங்களுக்கு குறைவே இல்லை. நவராத்திரி விழா காலங்களில் சிறுவர் சிறுமியர் வெவ்வேறு வகையான வேஷங்கள் தரித்து மகிழ்வார்கள். இவற்றில் ராதா கிருஷ்ணா ஆண்டாள் போன்ற வேதங்கள் மிக பிரபலமாகும்.இவ்வாறு அவர்கள் வேஷம் அணிந்து சுற்றித் திரிவது பார்ப்போரை மகிழ்வூட்டும். பெண்களோ நாளுக்கொரு காஞ்சிபுரம் சேலை அணிந்து அழைக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று பாடி மகிழ்வர்.

வெவ்வேறுபட்ட வீடுகளின் கொலு அலங்காரங்களுமே பேசப்படும் விஷயமாகஅமையும். பழமையான கொலு பொம்மைகளுடன் புதிய புதிய கருத்துக்களும் காட்சியாக அமைக்கப்படும். கிரிக்கெட் மைதானம் களியாட்ட விழா, பழமை ஆகிவிட்ட சமையல் கட்டு,திருமணவிழா, இவ்வாறாக அவரவர் கற்பனைக்கு ஏற்ப பலபல அலங்காரங்கள் பழமையுடன் புதுமையும் கலந்த கற்பனை வடிவங்கள் அலங்கரிக்கும்.

சென்னையிலே 72 வீடுகளை கொண்ட ஒரு கொலனியியல் கே.கே.நகரில் வாழ்ந்தேன். அங்கு வாழ்ந்த காலத்தில் இவ்வாறான நாட்களை அமோகமாக கொண்டாடி மகிழ்ந்தேன்.


குஜராத்தியரோ நவராத்திரி தினங்களில் Garba எனப்படும் சமூக நடனத்தை பெண்கள் கூடி பொது இடங்களில் ஆடி மகிழ்வார்கள். இது தவிர டண்டியா என்ற கோலாட்டம் ஆடி மகிழ்வார்கள்.

இதில் பல இனத்தவரும் கலந்து கொள்வார்கள்.இந்த டண்டியா என்ற கோலாட்டத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்வார்கள்.

சம்பிரதாயமான தேசிய உடை கண்ணாடிகளும் சம்கிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கவர்ச்சிகரமான இந்த உடையை அணிந்து இளவயது நங்கையர் இளைஞருடன் ஆடி கழிப்பார். நீங்கள் இதை ஆடாவிட்டாலும் அந்த இடம் சூழல், மயக்கம் ஊட்டுவதாக இருக்கும். இந்த நடனம் இன்று பல பெரிய ந கரங்களிலும் விமரிசையாக ஆடி கொண்டாடப்படுகிறது.

வங்காளயரோ காளியை தெய்வமாக வணங்குபவர், அதனால் வங்காளத்தில் துர்க்கா பூஜையே மிக பிரபலமான விழாவாகும். விஷேசமாக பந்தல் அமைத்து பத்து கரங்களுடன் கூடிய துர்க்கையை அமைப்பார்கள். துர்க்கை சிம்ம வாகனத்தில் ஏறி பத்து கரங்களிலும் பல்லாயுத தாரியாக சிவந்த உடை அணிந்து





மகிஷனை கொல்லும் காட்சி வெகு அழகாக அமைக் கப்பட்டிருக்கும்.

வருடாவருடம் கலைஞர்களால் இந்த வடிவம் புதிதாக வடிக்கப்படும். சணல்புல்லாலும், களிமண்ணாலும் இந்த உருவம் அமைக்கப்படும். சுருண்ட கருங்கூந்தல் கூட சணல் நூலாலேயே அமைக்கப்படும். பத்து நாட்களுக்கும் துர்க்கை பிரதிஷ்டை ஆகி இருக்கும் பந்தலிலே இசை நடன நிகழ்ச்சிகள் நாடகங்கள் கவிதை என பல வகை கலைகளும் அரங்கேறும். வங்கமே விழாக்கோலம் பூண்டு காணப்படும்.

இறுதி நாள் விஜயதசமி நிறைவேறியதும் அழகிய துர்காதேவி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவாள். தேவியின் அழகு கோலம் பார்க்க பரவசமூட்டும். ஆனால் அத்துணை தெய்வீக கோலம் கொண்ட அவள் கங்கை தீர்த்தத்திலே சங்கமமாவாள். அவள் கங்கை நீரிலே அமிழ்ந்து போகும் போது மக்கள் உணர்ச்சி கொந்தளிப்புடன் பார்த்து நிற்பார். வாய் விட்டு அழுவோரும் உண்டு.

இயற்கையில் இருந்து பெற்றது எதுவோ அது இயற்கையுடன் சங்கமம்மாவது நியதி.இதை நம்புபவர்கள் இந்துக்கள். இதுவே பிறப்பு இறப்பு அதன் இடைப்பட்ட வாழ்வுமாகும்.

"இன்று இருப்பது நாளை மறையும் இன்று இல்லாதது நாளை தோன்றும்"


வாழ்வு என்பது தோற்றம் மறைவு க்கு இடைப்பட்ட தே .இதையே இந்த துர்க்கையை நீரில் கரைக்கும் செயல் குறிக்கும்., துர்க்கை பிரதிஷ்டை ஆகி இருக்கும் காலம் அவள் தாய் வீட்டிற்கு வந்ததாகவும் , நீருடன் சங்கமம் ஆகும் போது அவள் திரும்ப தனது நாயகனிடம் போவதாகவும் மக்கள் தம்மை தேற்றறிக்கொள்வர்.

வீரத்தின் கோலமாய் பக்தி பரவசமூட்டி மக்கள் நெஞ்சிலே நிறைந்த தேவி நீரில் அமிழ்ந்து போவது மகா வேதனை யூட்டுவதாக இருக்கும்.

இதை தாங்கி கொள்ளவே இப்படி ஒரு கதை உருவாக்கப்பட்டது போலும்.



# யாழ்ப்பாண கலாசாரம் ஏன் சீரழிந்து செல்கின்றது?




**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர்,துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பளை.)

தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலய உற்சவம் என்பது வெறும் கிரியைகளை மட்டும் கொண்டதல்ல,அது மனித வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கையினையும் சீர்படுத்தி செழுமைப் படுத்தி ஒழுங்கமைப்பதற்கான நல்ல வழியை காட்டுகின்றது என்கிறார்

தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்.

இன்றைய எமது சமூகத்தில் சமய அறிவு போதாமல் இருக்கின்றது. எத்தனையோ அறநெறிப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லை.

எங்களுடைய தேவஸ்தானத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை தேசிய ரீதியில் சிறந்த அறநெறிப் பாடசாலை எனும் விருது பெற்றது. இங்கு பயிலும் பல மாணவர்கள் பல தேசிய ரீதியில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

இந்த அறநெறிப் பாடசாலையில் உங்களது பிள்ளைகளை கொண்டு வந்து சேருங்கள் என கேட்டால் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சமய அறிவைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை.

இதனால்த்தான் இன்றைய எமது சமூகம் மிகவும் ஆபத்தானதாக மாறி உள்ளது. போதைவஸ்தும் வாள்வெட்டு கலாசாரமும் யாழ்ப்பாணத்தில் மிகவும் மலிந்து கொண்ருப்பதற்கு காரணம் சமய அறிவு பற்றிய ஆர்வமும் தர்மம் பற்றிய எண்ணமும் மனதில் வளராமல் இருப்பதே ஆகும்.
இந்த நிலையில்த்தான் இந்த உற்சவ காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்து வந்து இறைவியை வழிபட செய்து ஆலயத்தில் தொண்டு செய்ய வைத்து அவர்களை நல்ல வழியில் வளர்க்க வேண்டும். இல்லை என்றால் எங்களுடைய எதிர்கால தலைமுறை பற்றிய ஒரு கேள்விக்குறி இருந்து கொண்டே இருக்கும். எனவே இந்த உற்சவ காலத்தில் சைவ மக்கள் நிறைய விடையங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.

விரம் என்றால் காலையில் உணவு உண்ணாமல் மதியம் ஒரு பிடி பிடிப்பதுதான் விரதம் என நினைக்கின்றார்கள்.

நம் முன்னோர்கள் உற்சவ காலத்தில் விரத அனுட்டானங் களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் ஆனால் இன்று பலபேர் விரம் என்றால் காலையில் உணவு உண்ணாமல் மதியம் ஒரு பிடி பிடிப்பதுதான் விரதம் என நினைக்கின்றார்கள்.

இதுவல்ல விரதம் என்பது. விரதம் என்றால் மனதைச் சுருக்கி உடலைச் சுருக்கி உள்ளத்தை இறைவன் மீது விரியச் செய்து எண்ணங்களை எல்லாம் தூய்மைப் படுத்துவதுதான் விரதம் ஆகும்.

விரதங்களிலே நித்திய விரதம் நைமித்திய விரதம் என இரண்டு விரதங்கள் உள்ளன. நித்திய விரதம் என்பது சத்தியமாக வாழ்தலைக் குறிக்கும். தாய், தந்தை கணவன், மனைவி, பிள்ளைகள் என ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை சரிவர நிறைவேற்றுவதை நித்திய விரதம் குறிக்கின்றது.

ஒரு பிள்ளை தனது பெற்றோருக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஒரு மனைவி தனக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும் என இந்த நித்திய விரதம் தெளிவாக சொல்கின்றது.




# கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்.



ஆனால் தற்காலத்தில் இந்த நித்திய விரதத்தைப் பற்றி பலருக்கும் தெளிவாக விளங்குவதாக தெரியவில்லை.இன்று பலர் நினைக்கின்றார்கள் உணவைத் தவிர்த்து நைமித்திய விரதத்தைப் பிடித்தால் எல்லா பலன்களும் கிடைத்து விடும் என்று ஆனால் நித்திய விரதத்தை சரியாகப் பிடித்தால்தான் நைமித்திய விரதத்திற்கு பலன் உண்டு. இந்த விரதத்தின் உச்சம்தான்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

என்று வள்ளுவர் சொன்னார்.மிருகங்களை பலியிடாமல் வேறு எந்த உயிர்களிற்கும் தீமை செய்யாமல் எவன் ஒருவன் வாழ்கின்றானோ அவனுக்கு இந்த நித்திய விரதத்தின் முழுப் பலனும் கிடைக்கும்.

நாங்கள் உணவிற்காக மிருகங்களை வதம் செய்து உண் போமேயானால் அது துன்பம். இன்று பலபேருக்கு விளங்குவதாக இல்லை. ஆசையாக மிருகங்களை வளர்த்து விட்டு கொண்டு போய் வேள்வியிலே வெட்டுகின்றார்கள்.

பாவம் அது, வளருகின்ற போது தனது எஜமான் தனக்கு உணவு தருகின்றார் என எஜமான் மீது அளவு கடந்த பாச மழை பொழிகின்றது. ஆனால் அந்த எஜமான் ஒருநாள் அதைப் பிடித்துக் கொண்டு போய் மேள தாளத்துடன் கழுத்தை வெட்டி வீழ்த்துகின்றார்.

துடித்து துடித்து அந்த மிருகம் இறக்கின்றது. அதனால்தான் இந்த உயிரை இப்படி வதம் செய்தால் என்ன பலன் என்று மகான்கள் எழுதி வைத்துள்ளார்கள். எத்தனை பிறவிகள் எடுத்து இந்தப் பாவத்தை கழுவ வேண்டும் என நம் சமயப் பெரியார்கள் தளிவாக எழுதி வைத்துள்ளார்கள்.

நாம் என்ன செய்கின்றோம் நித்தியமாக பிடிக்கின்ற விரதத்தை கைவிட்டு நைமித்தியமாக பிடிக்கின்ற இந்த உணவைத் தவிர்க்கும் விரதத்தைப் பிடிக்கின்றோம்.

விரதத்தைப் பற்றி நமது ஆறுமுக நாவலர் பெருமான் கூறும் போது உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இறை சிந்தனையோடு தங்கள் பொழுதைக் கழித்தலே விரதம் என்கிறார்.

சில ஞானிகளிடம் விரதம் என்றால் என்ன என கேட்கும் போது அவர்கள் அறுசுவை நீக்குதலே விரதம் என்கிறார்கள்.

நம்மில் பல பேர் நினைக்கின்றர்கள் விரதம் என்றால் காலையில் உணவு உண்ணாமல் 10 கறியுடன் மதியம் ஒரு பிடி பிடிப்பதென்று. உண்மையில் அறுசுவை நீக்கி உண்ணுதலே விரதம் என மகான்கள் எழுதி வைத்துள்ளார்கள்.

விரதத்திற்கு உபவாசம் என்றும் சொல்கின்றார்கள் இதற்கு என்ன பொருள் என்றால் "வாசம்" என்றால் வசித்தல் என்று பொருள் "உப" என்றால் அருகே என்று பொருள் கடவுளுக்கு அருகே வசித்தல்தான் உபவாசம் என்பதாகும்.

கந்த சஷ்டி போன்ற உபவாசங்களுக்கு நம் முன்னோர்கள் நிண்ட நேரம் போய் ஆலயங்களிலே தங்கி இருப்பார்கள் . உணவைப் பற்றிய எண்ணங்களை தவிர்த்து இறைவன் பற்றிய சிந்தனையுடன் இருப்பதே உபவாசம் என்பதாகும்.

கந்த சஷ்டி உபவாசத்தின் போது திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு சென்று பார்த்தால் பல ஆயிரம் பக்தர்கள் நீண்ட நேரமாக ஆலயத்தில் இறை சிந்தனையுடன் இருப்பார்கள்.

அங்கு இடம்பெறும் சொற்பொழிவுகளை மிக ஆர்வத்துடன் கேட்பார்கள். நான் ஆறு தடவைகள் அங்கு சென்று உரையாற்றியுள்ளேன்.

சும்மா படுத்து இருப்பார்கள் எழும்பி கேள்வி கேட்பார்கள், இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர்கள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக பணியாற்றுவார்கள்.

கந்த சஷ்டி உபவாசம் என்றவுடன் அவர்கள் மெய் மறந்து மிக எளிமையாக வந்து இறை சிந்தனையுடன் இருப்பார்கள்.






## ஒரு காலத்திலே ஆலயங்கள் சிறியதாகவும் ஆலயங்களில் இருந்த மடங்கள் பெரியதாகவும் இருந்தன.




நம்மில் பலருக்கு உபவாசம் என்றால் என்னவென்று தெரியாது.சிலரிடம் நீங்கள் உபவாசமா எனக் கேட்டால் நாங்கள் ஒரு நேர உணவு அல்லது பாலும் பழமும் என சாப்பாட்டு கதையினைத்தான் முதலில் சொல்லுவார்கள்.

கடவுளோடு ஒன்றிந்து இருப்பதைப் பற்றி சொல்ல மாட்டார்கள். நான் இன்று உபவாசம் என்றால் தெய்வத்துடன் நீண்ட நேரம் வசிக்கின்றேன் என்று சொல்ல வேண்டும்.



விரதங்களின் மகிமை பற்றி தனுர் வேதம் மிகவும் சிறப்பாக சொல்கின்றது. எந்தவொரு உயிரும் துன்பப்படும் போது அதற்கு உதவிக் கரம் நீட்டுவதுதான் விரதத்தின் முக்கிய செய்தியாக சொல்லப்படுகின்றது.

எந்த உயிரினங்களும் துன்பப் படக் கூடாது என்ற உயர் சிந்தனையுடன் நித்திய விரதத்தை சரியாக கடைப்பிடிப்பவர் களுக்கே நைமித்திய விரதத்தின் பலனும் கிடைக்கும்.

நித்திய விரதத்தின் கடமைகளை துறந்து உணவை தவிர்ப்பதால் எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை. இந்த நித்திய விரதத்திற்கு உள்ள பயனைப் போல வேறு எந்த விரதத்திற்கும் பலன் கிடையாது.

இந்த நித்திய விரதங்களில் எங்களை அறியாமல் விட்ட பிழைகளை எல்லாம் மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கேட்பதற்காகத்தான் ஆலய உற்சவ காலத்தில் உணவைச் சுருக்கி ஆலயத்தில் நீண்ட நேரம் இருந்து தெய்வத்தை மண்றாடி, மனத்தினால் வாக்கினால் காயத்தினால் தெய்வ சிந்தனையுடன் தெய்வ காரியங்கள் செய்வதுதான் ஆலய உற்சவ காலங்கள் ஆகும். விரத காலத்தில் நாங்கள் அரிசி முதலான உணவுப் பொருட்களை ஆலயத்திற்கு கொண்டு வந்து பிறர் உண்பதை பார்த்து மகிழ்வதுதான் விரதத்தின் உச்சப் பயன் ஆகும்.

அதனால்த்தான் ஒரு காலத்திலே ஆலயங்கள் சிறியதாகவும் ஆலயங்களில் இருந்த மடங்கள் பெரியதாகவும் இருந்தன.

**செல்வச் சந்நிதி ஆலயம் மிகச் சிறியது ஆனால் 41 மடங்கள் இருந்தன அதனால்த்தான் அவனை அன்னதானக் கந்தன் என்று அழைக்கின்றார்கள்.**

எனவே விரத்தை தயவு செய்து விளங்கி கொள்ளுங்கள். விரத்திற்கு நாங்கள் சாப்பிடப் போகின்றோம் என்று சொல்வ தெல்லாம் அறியாமையின் வெளிப்பாடு.

நித்திய விரதத்தின் மகத்துவத்தை உணராமல் உணவைத் தவிர்ப்பதால் என்ன பலன்? தாய் தந்தையரை சாப்பிட்டீர்களா என்று கூட கேட்காமல் உணவைத் தவிர்த்து நைமித்திய விரதம் இருந்து ஒரு பலனும் கிடைக்கப் போவதில்லை.

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி என்று சொல்வதன் மகத்துவம் என்ன என்பதை தயவு செய்து விளங்கி கொள்ளுங்கள். உணவின்றி அல்லல்படும் உயிர்களுக்கு உணவு கொடுங்கள் அதுவே விரதம் ஆகும்.

நான் விரதத்திற்கு சாப்பிடப் போறன் என்று கூறி விட்டு எல்லா கதவுகளையும் சாத்தி விட்டு பத்து கறியுடன் ஒரு பிடி பிடிப்பது விரதம் இல்லை. உண்ணும் உணவை பிறருக்கு கொடுத்து உண்பதுதான் விரதம் ஆகும். இந்த விரதங்களில் பல விரதங்கள் இருந்தாலும் நாளாந்தம் நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நமது கடமைகளை சொல்லும் நித்திய விரதமே மிக உயர்ந்தது என்கிறார்கள் நமது மகான்கள்.

இன்று மதுச் சாலைகளில் கூட்டம் நிரம்பி வழிகின்றது மலை என்றதும் பெரும் கூட்டம் அங்கு கூடுகின்றது அங்கு வருவோர்க்கு இது பாவம் என்று அவர்களுக்கு தெரியவில்லை. கடவுள் நல்ல உடலைத் தந்துள்ளார் நல்ல சிந்திக்கின்ற ஆற்றலைத் தந்துள்ளார் அதன் மூலம் நித்திய கருமங்களை ஆற்ற வேண்டும் இவற்றை செய்யாமல் கடவுளை வந்து பார்ப்பதால் எந்த பலனும் இல்லை.
எனவே அன்பர்களே நாளும் பொழுதும் எங்களை நாங்களே கேள்வி கேட்டு எங்களை நாங்களே உணர்ந்து கொண்டு நித்திய கருமங்களை ஆற்றி சிறப்புடன் வாழ்வோமாக.
நன்றி: சிவசொரூபன்




பக்குவத்திருமணி
சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்
அவர்களின் மணிவிழா
சிறக்க வாழ்த்துகள்

K.K.L
Textilien Schmuck Haushaltsware

உங்கள் விருப்பம்போல் தரமான
ஆடைகளின் தெரிவுக்கு
எம்மை நாடுங்கள்


Tel: 0231 96 98 6610

RHEINISCHE STR 56
44137 DORTMUND





# " ஒரு பொல்லாப்பும் இல்லை "



**- யோக சுவாமிகள்**

சஞ்சலம் வராமல் இவ்வுலகில் வாழவும் முடியுமோ? இவ்வுலகிற் பிறப்பதையே பிணியாகச் சொல்லப்பட்டிருக்கிற பொழுது சஞ்சலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? சஞ்சலம் வந்து கொண்டேயிருக்கும். ஆனால், அதனால் பாதிக்கப்படாமலிருக்கவும் வழி காட்டப்பட்டிருக்கின்றது. சற்குருவின் கடாட்சத்தாலும் மெய்யறிவைப் பெறுவதாலும் அவ்வழி எதுவெனவறிந்து, அதைக் கடைப்பிடித்தொழுகுவோமாகில், சஞ்சலம் நம்மை அலைக்கவும் முடியாது. அசைக்கவும் முடியாது.

இவ்வுலகதிலோ யாவும் அநித்தியம். இத்தேகம் அநித்தியம். பஞ்சபூதங்கள் அநித்தியம். ஐம்பொறி ஐம்புலன்கள் அநித்தியம். பெண்டிர்பிள்ளை அநித்தியம். பொருள்பண்டம் அநித்தியம் சீர்சிறப்பு அநித்தியம். பேர் புகழ் அநித்தியம். அதிகாரமும் செல்வாக்கும் அநித்தியம். எல்லாம் அநித்தியம். ஆகையால், இவைகளில் மயங்கிப் பற்று வைப்பது சஞ்சலத்துக்கிடமாகும். இவை நாமல்ல. இவை நமக்கந்நியமானவை. கருமம் புரிவதற்கு இவைகள் உபயோகப்படுவன.

அவைகளை அந்த உபயோகத்துக் குதவக்கூடிய நிலையில் வைத்துப் பேண வேண்டியது முறை. ஆனால் அவை நமக் கென்றும் வேண்டியவையுமல்ல. நம்மைவிட்டுப் பிரியாது என்றும் இருப்பவையுமல்ல. ஆகையால், மனத்தை விடயங்களில் அதிகஞ் செல்லவிடுவதால் சஞ்சலத்தை வரவழைப்பதல்லாமல் வேறொரு பிரயோசனமும் பெறமுடியாது.

யாக்கையே நிலையற்றபொழுது யாக்கை சம்பந்தமாக அநுபவிக்கும் சுகங்கள் நிலைத்தாலென்ன, நிலையா விட்டாற்றானென்ன? ஈற்றில் எல்லாம் அநித்தியமாகவே முடிகின்றது. ஆகையால் அநித்திய வஸ்துக்களில் பற்று வைப்பதில் ஒரு சுகமுமில்லை. கடைசியில் எல்லாம் சஞ்சலத் தையே வருவிக்கின்றன. ஒன்றும் பூரணவின்பத்தைக் கொடுப்பதாயில்லை. அவற்றின் சுகம் சிற்றின்பமாகவே முடிகின்றது. சிற்றின்பம் நிலையாத இன்பம். அதன் விளைவு துன்பம். அது நம்மைப் பந்தப்படுத்தும் இன்பம். உலக வாழ்வின் சஞ்சலங்களையெல்லம் கண்ட விவேகி அச் சஞ்சலங்களுக்குக் காரணமாயிருப்பனவற்றை ஒரு பொழுதும் நாடமாட்டான்.

நித்தியா நித்திய விவேகம் ஒன்றுமே மனிதனைச் சஞ்சலத்திலிருந்து மீட்கக்கூடும். நித்தியானந்த நித்திய வஸ்து வாகிய இறை எம்முடன் என்றும் உள்ளது. அது நம்மை விட்டு ஒரு காலத்திலும் பிரியாதது. அதை உணர்வதே வீடு. அதைப் புசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பம். அது குணங்குறியற்றது. அது ஒரு மாதிரியிலுமில்லை. அது ஆச்சிரமங்களில் தங்கியிருக்கவில்லை. சாதி, சமயம், தொழில் முதலிவைகளாலுண்டாகும் பேதங்களில் அது தங்கியிருக் கவில்லை. எல்லோருக்குஞ் சமபாகமாயுள்ளது. எவரொருவருக் குஞ் சொந்தமானதன்று. எல்லாவற்றையும் மறந்து அதன் நினைவு ஒன்றேயிருந்தால் போதும். ஒரு துகாமும், ஒரு சஞ்சலமும் நம்மைப் பாதிக்கமுடியாது.

கடவுள் ஒருவரே நித்திய வஸ்து. நாம் வேறு, கடவுள் வேறு எனுமெண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கப்படாது. நம்முடையதென்று ஒன்றையும் வைத்திருக்கப்படாது. நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அவரிடத்தே ஒப்படைத்துப் போடவேண்டும். நான் என்ற நினைவேயிருக்கப்பாடாது. எல்லாம் அவருடையதாய் விட்டு விட வேண்டியது. தனம், தானியம், பூமி முதலிய சகல சம்பத்தும் அவரால் நமக்களிக்கப்பட்டன. எல்லாம் அவருடையது. நமக்கென்று எதுவிருக்கின்றது? நம்முடன் கூட வந்ததெது? நம்முடன் கூடப்போவதெது? ஒன்றுமேயில்லை. எல்லாம் வந்தவாறு ஏதோ மாயமாய்ப் போய் விடும். ஆகையால் நிலையற்ற பொருட்களில் மனத்தைச் செல்லவிடுவது சஞ்சலத்துக்கிடமாகும். அவற்றில் பற்று வைப்பது தவறு. ஏதுமொரு காலத்தில் அவைகள் நம்மை விட்டுப்பிரியவேண்டி வரும். அப்பொழுது சஞ்சலத்துக்கிடமாகும். பரம் ஒன்றே எக்காலத்தும் நம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது. அது நித்தியமான பொருள். பண்டும், இன்றும், என்றும் அது நம் உயிருக்குயிராய் நம்மறிவினுக்கறிவாய், நம்மை விட்டுப் பிரியாதிருக்கின்றது. வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும், துன்பிலும், இறப்பிலும், பிறப்பிலும் நம்முடன் எக்காலத்துங் கூடவேயிருக்கின்றது. நமக்கு என்றும் வழிகாட்டுவதும் அதுவே. அதன் சந்நிதானத்தை விட்டு ஒரு காலமும் விலகமுடியாது. அஃது அப்படியேயுள்ள காரியம். எப்பவோ முடிந்த காரியம்.

எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம் - இறைவனுடைய சந்நிதானத்தில் ஒரு பிழையுமுண்டாகாது. எங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என ஆசைப்பட வேண்டியதில்லை. எதைக் கடவுள் நமக்குக் கொடுக்கிறாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்க வேண்டியது. கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப் பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்குச் சற்றேனும் ஐயமிருக்கப்படாது. சில காரியங்கள் நமக்கு விளங்காமலிருக்கலாம். அதையிட்டு நாமேன் கவலைப்படவேண்டும்? எல்லாம் கடவுளுடைய சித்தத்தின்படி நடந்துகொண்டு போகின்றன. நாமுன்றுமறியோம். எல்லாம் அவர் அறிவார். எமது கடன் பணி செய்து கிடப்பதே. இறைவன் சந்நிதானத்தில் நாம் என்றுமிருப்பதால் நமக்கொரு குறையுமில்லை. நமது செயல் ஒன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல் எனும் உணர்ச்சி நாளாந்தம் வளர்ந்துகொண்டு போக "ஒரு பொல்லாப்பும் இல்லை" எனும் மகா வாக்கியத்தின் உண்மையை நாம் உணரக்கூடியதாய் வரும். திடபக்தி வேண்டும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதவிடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழகவேண்டு.

"சஞ்சலம் வந்தாலும் வரட்டும் - வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு - ஒரு பொல்லாப்புமில்லை"

(இக்கட்டுரை சிவயோக சுவாமிகளின் ஆணைக்கு அமைய "சிவதொண்டன்" இதழில் வெளிவந்தது)

# தேர்வு நகர்வு தேர்ச்சி



"பக்குவத்திருமணி" பட்டத்தினை வெற்றிமணி, சிவத்தமிழ் சார்பாக 2007ம் ஆண்டு பொ.கனகசபாபதி அவர்கள் வழங்கினார்.

இன்று மணிவிழாக் காணும் பக்குவத்திருமணி சிவஸ்ரீ.ஆறுமுகம் பாஸ்கரக்குருக்கள் அவர்களுக்கு, 'பக்குவத்திருமணி' என்னும் பட்டத்தினை வெற்றிமணி, சிவத்தமிழ் இணைந்து 2007ம் ஆண்டு கம் நகரில் இடம் பெற்ற சிவத்தமிழ் விழாவில் வழங்கியது. அவ்விருதினை தகைசால் அமரர் பொ,கனகசபாபதி (முன்னாள் மகாஜனாக்கல்லூரி அதிபர்) வழங்கியது சிறப்பு.



வெற்றிமணியின் வெள்ளிவிழாவில் 2019 வாழ்நாள் சாதனையாளர் விருது

2019 ம் ஆண்டு வெற்றிமணியின் வெள்ளிவிழாவின் போது குருக்கள் ஐயா அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தோம். அந்த விருதினை யாவரும் ஏகோபித்த மனதுடன் ஏற்று பாராட்டி மகிழ்ந்தமையானது அவ்விருது அவருக்கு சிறப்பாக பொருந்தியமையைக் குறிக்கும்.




ஐரோப்பாவில் இன்று பல ஆலயங்கள் கோபுரங்களுடன்

எழுந்தாலும், ஆரம்பத்தில் அவ்வாறு எழவில்லை. அப்படி எழுவதற்கான நம்பிக்கையை விதைத்தவர் எங்கள் அன்புக்குரிய பாஸ்கரக்குருக்கள் அவர்களே ஆவர்.

அவரது ஆற்றல் பற்றி நேரிலும்,பத்திரிகை,தொலைக்காட்சிகள் வாயிலாகவும் நீங்கள் அறிந்திருக்க முடியும். ஆதன் மூலம் குருக்கள் அவர்களின் கடினமான உழைப்பு உங்களுக்கும் புரியும்.

பொதுமக்களின் பெரும் ஆதரவுடன் அவற்றை செய்தாலும், அந்த ஆதரவினை யாராலும் பெற்றுவிட முடியுமா?

இந்த ஆதரவுக்கு காரணமாக இவை மூன்றினைக் குறிப்பிடலாம்.

01.தேர்வு.
02.நகர்வு
03.தேர்ச்சி

என இவ்வாறு வகுக்கலாம்.

தேர்வு:
ஒன்றைச் செய்வதற்கு சரியான இடத்தேர்வு, எதிர்காலத்தில் விரிவாக்கங்கள் செய்ய ஏற்படின் அதற்கு ஏற்றதா? அந்த இடத்தின் சூழல் மக்களுக்கும், ஆலயத்தின் புனிதத்திற்கும் ஏற்றதா? என இவற்றை கருத்தில் கொண்டு இவரது தேர்வுகள் அமைகின்றன.

நகர்வு:
ஒரு இடத்திற்கான தேர்வு முடிந்தபின், தான் செய்ய வேண்டிய திட்டத்தை நிறைவேற்ற உரிய வழிமுறைகளில் முயன்று செய்தல், அத்திட்டத்தை நிறைவு செய்ய ஒரு கால வரையறை அமைத்து செய்தல். இன்னும் பல..

தேர்ச்சி :
சிலர் பரீட்சைகளுக்கு தேர்ச்சியை இலக்காக வைத்து படிப்பார்கள். ஆனால் ஐயா அவர்களின் முயற்சிகள் தேர்ச்சியை மட்டும் நோக்கியது அல்ல. அவருடைய அடுத்த கட்டத்திற்கான முன்னோட்டமாகவும் அமையும். அதனால் அவர் எடுத்த காரியத்தை முடிப்பதில் அவருக்கு எதோ ஒரு வகையில் தேர்ச்சி கிடைக்கும்.



குருக்கள் ஐயாவின் 50 வது பிறந்த நாளில் சிவத்தமிழ், வெற்றிமணி சார்பாக வாழ்த்திப் பாடிய தென்னிந்திய திரைப்படப்பாடகர் பல்ராம் அவர்களுக்கு ஆன்மிகத்தென்றல் த.புவனேந்திரன் பொன்னாடை போர்திக் கௌரவித்தார்.13.09.2013

மேலும் பண்டைக்கால விதிமுறைகள் மாறாது அதனைப் பேணியபடியே தனது செயல்களை முன்னெடுப்பதோடு, எதிர்காலத்தில் ஒரு பிழையான கருத்தை விதைக்காமல் செல்வதிலும் மிகக்கவனமாக இருப்பதை நீங்களும் அவதானிக்கலாம்.

ஒருவரது செயல் யாவரும் போற்றும் வண்ணம் அமைவது அரிது. நற்செயல்கள் பிறர் போற்றுவதற்காகவே மட்டும் புரிவதும் அல்ல. ஒருவரின் வாழ்விலும், அவர்களது செயலிலும் நல்லவற்றை மட்டும் எடுத்துக்கொண்டாலே போதும். அவை நமக்கும் ஊக்கமாக அமையும்.
அப்படி நீங்களும் உங்கள் துறைசார்ந்து துருவித் துருவி நல்லனவற்றை தேடுங்கள். எங்கேயோ, எப்போதோ ஒரு நாள் ஒரு மலர் உங்கள் உள்ளத்திலும் பூக்கும். உங்கள் வாழ்வை ஒரு இலட்சியத்துடன் இணையுங்கள்.

மு.க.சு.சிவகுமாரன்

# இறைவனை மனித வடிவிலும் காணலாம்!



உலக வரலாற்றில் மனிதன் நாகரீகம் அடைந்ததற்கான முதல் அறிகுறி எது? என மானுடவியலாளர் மார்கரெட் மீட்டை (Margaret Mead) ஒரு மாணவர் கேட்கிறார். மனிதன் நெருப்பைக் கண்டறிந்ததையோ சக்கரத்தை உருவாக்கியதையோ அவர் பதிலாகச் சொல்லவில்லை.


தொடை எலும்பு முறிந்து முதன்முதலில் குணமானதையே மனிதன் பண்பட்டதற்கான அடையாளமாகக் குறிப்பிடுகிறார். இப்பதில் எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மீட் மேலும் விளக்குகிறார். விலங்குகளின் உலகில் கால் எலும்பு முறிந்துவிட்டால் அது செத்துவிடும். ஆபத்திலிருந்து அதனால் தப்பிக்க முடியாது, வேட்டையாட இயலாது, நீர்நிலைகளைத் தேடியலைந்து தாகம் தணிக்க முடியாது. உடைந்த எலும்பு சீராவதற்கு நீண்டகாலமாகும் என்பதால் மற்ற விலங்குகளும் அதனைக் கைவிட்டுவிடும். அடிபட்ட உயிரினம் பிற வேட்டை மிருகங்களுக்கு இரையாவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால், ஆதிமனிதனின் தொடை எலும்பு முறிந்து குணமானதற்கான தொல்படிவங்கள் கிடைத்திருக்கின்றன. அவனது எலும்பு சரியாகிப் பிழைத்திருக்கிறான் எனில் அவனுடன் யாராவது தங்கியிருந்து பணிவிடைகள் செய்திருக்க வேண்டும். அடர் காடுகளிலும் மலைகளிலும் நடமாட முடியாத அவனைப் பல்வேறு ஆபத்துகளிலிருந்து காப்பாற்றிப் பாதுகாத்திருக்க வேண்டும். அவனுக்கான உணவையும் சேகரித்து வந்து நோயுற்ற காலம் முழுவதும் அன்புடன் அக்கறை செலுத்தியிருக்க வேண்டும்.

ஒருவர் துயருறும் காலம் முழுக்க உடனிருந்து உதவி செய்தபோதே மனித நாகரீகம் பிறந்திருக்கிறது. நாம் பிறருக்குச் சேவை செய்யும்போதே உன்னதமானவர்கள் ஆகிறோம். மனிதனாக நடந்துகொள்கிறோம். இறைவனை மனித வடிவிலும் காணலாம். படித்ததில் பிடித்தது.

# வாழ்க்கையின் வீழ்ச்சி தொடங்கும் இடம்!

**-தவத்திரு குன்றக்குடி அடிகள்**



அரேபிய நாடு ஒன்றிலே பழுதடைந்த நெய்யை விற்பனை செய்த குற்றத்துக்காக ஒரு ஏழை வியாபாரி கைது செய்யப்பட்டான். அவனது வசதியின்மையைப் பார்த்து இரக்கப்பட்ட நீதிபதி அவனுக்கு மூன்று வேறுபட்ட தண்டனைகளைக் கொடுத்து இதில் ஏதாவது ஒன்றை நீயே தேர்ந்து எடுத்துக்கொள் என்று தீர்ப்புக் கூறினார். முதலாவது தண்டனை நீ விற்ற பழுதடைந்த நெய்யில் ஏழு போத்தல் நெய்யை நீயே குடிக்க வேண்டும். இரண்டாவது தண்டனை 20 சவுக்கடிகள் வாங்க வேண்டும். இவை இரண்டும் விருப்பம் இல்லை என்றால் தண்டனைப் பணமாக 100 பொற்காசுகள் கட்ட வேண்டும்.

வியாபாரி காசும் செலவாகி விடாமல் அடியும் வாங்கித் துன்பப்படாமல் ஏழு போத்தல் பழுதான நெய்யைக் குடிப்பதற்கு ஒத்துக் கொண்டான். நெய் கொண்டுவரப்பட்டது. அவனால் ஐந்து போத்தலுக்கு மேலே குடிக்க முடியவில்லை. வாந்தி வந்தது. அடுத்து காசு நட்டம் வராமல் இருபது சவுக்கடியை வாங்கிக் கொள்வோம் என்று நினைத்து 15 சவுக்கடிகளை வாங்கினான். மீதி ஐந்தையும் வாங்க முடியாமல் முதுகு வெடித்து இரத்தம் வடிந்தது. துடிதுடித்து எழுந்தவன் ஐயா நான் நூறு பொற்காசுகளையே கட்டிவிடுகின்றேன். என்று சொல்லி 100 பொற்காசுகளைக் கட்டிவிட்டு ஓடினான். இந்த அரேபிய வியாபாரிக்கு நீதிபதி கொடுத்த தண்டனை போலத்தான் இறைவனும் எங்கள் மீது இரக்கப்பட்டு நாம் செய்யும் தவறுகளுக்கு வேறுபட்ட துன்பங்களைத் தந்து விரும்பியதை நீயே ஏற்றுக் கொள் என்று சொல்கின்றான். ஆனால் நாங்களோ எங்களைப் புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டு எல்லாத் துன்பங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்றுக் கொள்ளத் தயாராகி விடுகின்றோம். மனித வாழ்வின் தொடர்ச்சியான வீழ்ச்சி இங்கிருந்துதான் தொடங்குகின்றது. (தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவில் இருந்து) இரா.சம்பந்தன். கனடா




குறுங்கதை

# சிதம்பர ரகசியம்



**சுருதி-அவுஸ்திரேலியா.**

ராகவன் தமிழ்நாட்டின் சில கோவில்களைத் தரிசிக்க விரும்பினான். பள்ளியில் படித்தது முதல் சிதம்பரம் நடராஜர் கோவில், மதுரை மீனாட்சி அம்மன், சீர்காழி சட்டநாதர், தஞ்சைப் பெருங்கோவில் என அவன் கனவு பெரியது. சிறு வயது முதலே இறை பக்தி அவனை ஆட்கொண்டு விட்டது. நாலாம் வகுப்பு படிக்கும்போது கேட்டது, பத்தாம் வகுப்பில் சித்தித்தது.

முதலில் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சென்றார்கள். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் பாடல் பெற்ற திருத்தலம் அது. கோவிலுக்குள் புகுந்ததும் ஒருவித பரவச நிலையை அடைந்துவிட்டான் ராகவன். காந்தசக்தி ஒன்று தன்னைச் சூழ்ந்திருப்பது போன்ற உணர்வு அது.

அவர்கள் போன நேரத்தில், கோவிலின் ஐந்து சபைகளில் ஒன்றான சித்தசபையில் பூசை தொடங்கியிருந்ததால், நேரே பூசை நடக்குமிடம் சென்று விட்டார்கள். சித்தசபையின் சபாநாயகரின் வலதுபுறத்தில் உள்ள வாயிலின் திரை விலக்கப்பட கற்பூர ஆராதனை தெரிகின்றது. உள்ளே எந்தவொரு சிலையும் இல்லை. தங்கத்தாலான வில்வமாலை ஒன்று அங்கே தொங்குகின்றது.

தீபாராதனை முடிந்ததும் அருகே விபூதி பெற்றுக் கொண்டார்கள். கோவிலைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். கோயிலிற்கு ஒன்பது வாசல்கள் இருக்கின்றன. அது மனித உடலில் ஒன்பது துவாரங்கள் இருப்பதைக் குறிக்கின்றது. மனிதருக்கு இதயம் இடப்புறம் அமைந்திருப்பது போல, கோவிலின் மூலவர் இருக்கும் கருவறை, கோவிலின் நடுவில் அல்லாமல் இடது புறம் நகர்ந்து இருக்கின்றது. ஒரு மனிதர் தினமும் 21,600 தடவைகள் மூச்சு விடுவது போல, கோவில் விமானத்தின் கூரை மீது 21,600 தங்கத் தகடுகள் இருக்கின்றன. மனிதருக்குள் 72,000 நாடிகள் ஓடுவது போல, கூரையில் 72,000 தங்க ஆணிகள் இருக்கின்றன. கோவிலுக்கும் மனித உடலுக்குமான தொடர்பை எண்ணி வியந்த தாயார், “இந்த கோயில் அமைந்திருக்கும் விதமே ஒரு ரகசியம் தான்” என்றார்.

“அப்பா சிதம்பர ரகசியம் எங்கே இருக்கு?” திடீரென்று ராகவன் கேட்டான். யாரிடம் கேட்பது? தூரத்தே ஒரு அந்தணர் வரு கின்றார். அவரிடம் கேட்டபோது, அவர் சித்தசபையை நோக்கிக் காட்டுகின்றார். மீண்டும் அவர்கள் புறப்பட்ட இடத்திற்கு வருகின்றார்கள். முதலில் தரிசனம் பெற்ற வாயில் தான் சிதம்பர ரகசியம். மூர்த்தி ஒன்றும் இல்லாமல், இறைவன் ஆகாய உருவில் - முடிவும் முதலும் இல்லாது இருக்கின்றார். வெட்ட வெளியில் ஆண்டவனை உணரத்தான் முடியும். அதுவே சிதம்பர ரகசியம்.

வாயிலின் அருகே ஒரு சிறு வரிசை தொடங்கியிருந்தது. ரகசியத்தைப் பார்ப்பதற்கு பணம் செலுத்த வேண்டும். ராகவனின் அப்பா வரிசையில் சேர்ந்து கொள்கின்றார். ரகசியத்தைப் பார்ப்பதற்கான பணம் ஆளுக்கு ஆள் வேறுபடு கின்றது. இந்தியர்களுக்கு ஒரு தொகையும், இலங்கையருக்கு இன்னொன்றும், அதுவே வெளிநாட்டவருக்கு இன்னொரு தொகையுமாக மாறுகின்றது. அவ்வளவு பணம் ராகவனின் அப்பாவிடம் இல்லை.

“இன்னொரு நாள் பார்க்கலாம்.” என்றார் அப்பா. அம்மாவிற்கும் மகனுக்கும் முகம் தொங்கிவிட்டது. “இந்தக் கோவில் அமைந்திருப்பதே பூமியின் காந்த மையப்புள்ளியில் தான். நாம் அங்கே தான் நின்று கொண்டிருக்கின்றோம்.அது கூட ரகசியம் தான்” மீண்டும் சமாதானம் கூறிவிட்டு, “இனி நாங்கள் சீர்காழிக்குச் செல்வோம்.” என்றார் அப்பா.

அவர்கள் புறப்பட்ட கோபுர வாயிலை நோக்கிச் சென்றார்கள். இடையில் கோவில் பிரசாதங்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தன. “ஐய்... பூந்தி லட்டு, தேன்குழல்” ராகவனிற்கு நாவூறியது. ஒவ்வொன்றிலும் இரண்டு பொதிகள் வாங்கிக் கொண்டார்கள். கோவிலை விட்டு வெளியேறி, கோபுரம் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

“ஐயா...” பின்னாலே ஒரு குரல். பிச்சைக்காரன் ஒருவன் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவனது வலது கை இவர்கள் வைத்திருந்த பொதிகளை நோக்கி நீண்டிருந்தது. “அம்மா... என்ன செய்ய?” “ஒரு பொதியைக் குடு.”

ராகவ் தேன்குழல் பொதியை அவனிடம் நீட்டினான். பிச்சைக்காரன் சிரித்தபடியே அதை வாங்கிக் கொண்டான். ஆனால் அவன் அவர்களை விட்டுப் போவதாக இல்லை. மீண்டும் அவன் பார்வை பூந்திலட்டுப் பொதியின் மீது விழுந்தது.

“அம்மா... பாக்கப் பாவமாக் கிடக்கு. இதையும் குடுக்கட்டா?”

“சரி... உனக்கு விருப்பமெண்டாக் குடு. நாங்கள் வெளிக் கடையில் உனக்கு வாங்கித் தருகின்றோம்.”

ராகவனிடமிருந்து அந்தப் பொதியையும் வாங்கிக் கொண்டதும், இடது புறமாக இருந்த பதினாறு தூண்கள் கொண்ட கட்டிடமொன்றை நோக்கி விரைந்து சென்றான் அந்தப் பிச்சைக்காரன். அவன் போகும் திசை நோக்கி இவர்கள் மூவரும் பார்த்தார்கள். இரண்டு பாழடைந்த கட்டிடங்களின் நடுவே கோயிலின் இன்னொரு கோபுரம் தெரிந்தது. ராகவன் அவனை நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினான்.

“ராகவன் எங்கே போகின்றாய்?” “பொறுங்கோ ஆள் என்ன செய்யிறார் எண்டு பாப்பம்.”

ராகவனைப் பின் தொடர்ந்து பெற்றோரும் சென்றார்கள். இவர்களின் ஆரவாரத்தைக் கண்ட கோபுரவாயிலில் நின்ற காவலர்களில் ஒருவன் இவர்களை நோக்கி விரைந்து வந்தான்.

“எங்கே செல்கின்றீர்கள்? அங்கே புனருத்தாரண வேலைகள் நடக்கின்றது. நீங்கள் அங்கே போகக்கூடாது. பாதுகாப்பில்லை.”

ராகவனின் அப்பா நடந்ததைக் கூறினார்.

“பிச்சைக்காரனா? ஒருபோதும் இருக்காது. ஒவ்வொரு கோபுர வாசலிலும் இரண்டு இரண்டு பாதுகாவலர்கள் நிற்கின்றோம். கோவில் அடியவர்களைத்தவிர வேறு ஒருவரையும் நாங்கள் உள்ளே அனுமதிப்பதில்லை.

பிச்சைக்காரர்கள் எல்லாம் கோயிலுக்கு வெளியே தான் நிற்க வேண்டும்.”

“உந்தத் திசை நோக்கித்தான் போனான்.”

அந்தப் பாதுகாவலன் அவர்கள் காட்டிய திசையில், மூன்று பேரையும் கூட்டிக் கொண்டு சென்றான். அங்கே கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒருவரும் இருக்கவில்லை.

“பார்த்தீர்களா? நான் சொன்னேனே! இந்தக் கோவிலுக்குள் பிச்சைக்காரர்கள் வந்தே பல வருடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் எனது வேலைக்கு ஆப்பு வைக்கப் பார்த்துவிட்டீர்கள்.”

“நாங்கள் மூன்றுபேரும் பார்த்தோமே! எங்களிடமிருந்து கோவில் பிரசாதத்தையும் பெற்றுக் கொண்டானே!”

பாதுகாவலர் அதிசயித்தார். இரண்டு கட்டடங்களுக்கும் நடுவே தெரிந்த கோபுரம் நோக்கிக் கரம் குவித்தார். “இப்படித்தான் இந்தக் கோயிலில் பல ரகசியங்கள் அடங்கியிருக்கு” என்றார் அவர். மனிதவடிவில் தெய்வங்கள்.




# பேரண்ட நடனம்

- வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்

ஜெனிவாவிலுள்ள துகள் பௌதிகவியல் ஆய்வுக்கான ஐரோப்பிய நடுவகத்திலே இந்தியாவினால் வழங்கப்பெற்ற அண்டத்தின் அழிவையும் ஆக்கத்தையும் குறிக்கும் சிவனின் அண்ட நடனத்தை அடையாளப் படுத்தும் படிமம் வைக்கப்பட்டுள்ளது. இது 2004 ஆம் ஆண்டில் திரைநீக்கம் செய்யப்பெற்றது. அதற்கருகே சிறப்பான ஓர் உலோகத் தகடு பதிக்கப்பட்டுள்ளது. அதில் நவீன பௌதிகவியல் அறிவாளியான குசவைதழக ஊயிசய கூறிய ஓர் அரிய செய்தி எழுதப் பெற்றுள்ளது. அந்தச் செய்தி இதுதான்:

இந்தியக் கலைஞர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிவ நடனத்தைக் காட்சிப்படுத்தும் அழகிய வெண்கலப் படிமங்களை உருவாக்கியுள்ளனர். நம்முடைய காலத்தில், அண்ட நடனத்தின் கோலங்களைக் காட்சிப்படுத்த பௌதிகவியலாளர் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியுள்ளனர். இதன்படி அண்ட நடனம் என்னும் உருவகம் பண்டைய புராணவியல், சமயக்கலை, நவீன பௌதிகவியல் ஆகியவற்றை ஒன்றுபடுத்துகிறது.

நவீன பௌதிகவியல், பருவங்களின் சுழற்சியில் மட்டுமன்றி எல்லா உயிரினங்களின் பிறப்பிலும் இறப்பிலும் ஆக்கம் மற்றும் அழிவின் தாளம் வெளிப்படுத்தப்படுகின்றது என்று கூறுகின்றது. நவீன பௌதிகவியலாளருக்கு, சிவனின் நடனம் துகள்களின் அணுப்பகுதியுடைய நடனமாகும் என்று அவர் கூறியுள்ளார். திருவாசகத்தில் திருச்சதகம் 8ஆம் பாடலில் மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகிறார்:

"உழிதரும் காலும் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரும் காலம் எக்காலம் வருவது வந்த தற்பின்
உழிதரு கால்அத்த உன்னடி யேன்செய்த வல்வி னையைக்
கழிதரு காலமு மாயவை காத்து எம்மைக் காப்பவனே"

நில்லாது திரியும் காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் தத்தம் நிலைகளிலே இருந்து ஒடுங்குகின்ற காலம் எப்போது வரும். காற்று,தீ, நீர், நிலம், ஆகாயம் ஐந்தும் ஒடுங்கினால் அல்லது மிகுந்தால் தோன்றுவதுதான் 'பேர் ஊழிக் காலம்'.

இவை ஐந்தும் தனித்தனியாக மிகுவதைக் கண்டுள்ளோம். அவை வருமாறு: காற்றுச் சூறாவழியானது; தீ பெருந்தீ ஆனது; நீர் சுனாமியாகப் பெருகியது; நிலம் பல தடவை நிற்றலை நீங்கி நடுங்கியுள்ளது. இவை நாம் ஓரளவு பட்டறிவில் பெற்றுள்ளோம். ஆனால் அவை ஐந்தும் ஒரே நேரத்தில் ஒடுங்கினால், அதுவே 'பேர்ஊழிக்காலம்' ஆகும். அப்படி அவை ஐந்தும் ஒடுங்கியதன் பின்னரும் 'என் தந்தையே! உன் ஒரு கால் இடையறாது ஓய்வின்றி அசைந்தாடிக்கொண்டிருக்கிறது' என்று மணிவாசகர் கூறுகிறார். அதுதான் பேரண்ட நடனத்தை ஆடிக்கொண்டிருக்கும் சிவனின் கால் ஆகும்.

துகள்களின் அணுப்பகுதியுடைய நடனமாக நவீன பௌதிக வியலாளர்கள் பெற்ற தரிசனத்தை நம்முடைய மெய்யடியார்கள் சிவனின் பேரண்ட நடனமாகத் தரிசித்துள்ளனர்.

# ஆலயகுருவும் ஆன்மீகப்பலமும்

- தமிழ்மணி நகுலா சிவநாதன் -யேர்மனி

தமிழரது பண்பாட்டு சின்னங்களாக விளங்குபவை கோவில்கள் என்றால் மிகையாகாது. சிற்பங்கள் சிலைகள் வாழ்வியலை நிர்ணயிக்கும் வண்ண ஓவியங்களாக சித்தரிக்கப்படுவது மனிதனது தன்னம்பிக்கையும் மகிழ்வையும் கொடுக்கும் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"" என்று தமிழ்மூதாட்டி ஔவையார் சொன்னது,

ஒருவனுக்குள் கடவுள் பக்தியிருந்தால்,அவன் பழிபாவங் களுக்கு அஞ்சி சமுதாயங்களுக்கு நன்மையுள்ள வனாக நடப்பான் என்பதுதான் இதன் பொருள். தமிழர்கள் இயற்கை வழிபாடும் ஆலயவழிபாடும் செய்து வருவது நம்பிக்கையின் பலத்தை கட்டியெழுப்பும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. ஒற்றுமையை வளர்க்கும் ஒன்றுபட்ட வழிபாட்டிற்கு கோவில்களே பெரிதும் வழிபாட்டு மையங்களாக அமைந்தன.

„"மாலறு நேயமும் மலிந்த வேடமும்தான் அரன்"" எனத் தொழுவோம் என்கிறது சிவஞானபோதம்.

உண்மைப்பக்தியுடன் சிவாலயம், சிவனடியார்களைத் தொழுதால் அறிவும் நல்வாழ்வும் கிட்டும் என்பது இதன் பொருள். நல்லறிவே மகிழ்ச்சியான வாழ்வின் அடித்தளம். இதனைத் தரும் ஆற்றல் ஆலயவழிபாட்டிற்கு மட்டுமே உண்டு. இதனால்த்தான் இறைவனின் அருட்சக்தியை தேக்கி வைக்கும் மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. அந்தவகையில் ஆலயத்தின் பெருமை உணர்ந்து தமிழ்மக்களுக்கு பெரிதும் பயன்படும் ஆலயமாக யேர்மனியில் ஹம் நகர் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தை தோற்றுவித்தார்



ஹம் ஸ்ரீ பாஸ்கரக்குருக்கள். இந்த ஆலயத்தை, குருவின் ஆசியும் அம்பாளின் அனுட்கிரகமும் கிடைத்து 1985 இல் முதன் முதல் நிலவறையில் அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டது.

இடவசதிகள் கிடைக்காத காலம் நிலவறைகளே வழிபாட்டு அறைகளாக மாறின. காலம் செல்ல புதிய கட்டிடத்திற்கான காணி வாங்கப்பட்டு 1999,இல் Seigenberg 5 என்ற இடத்தில் பிரமாண்டமான ஆலயமாக ஹம் காமாட்சியம்மாள் கட்டப்பட்டது. ஹம் ஸ்ரீ பாஸ்கரக்குருக்களின் எளிமையும் விடாமுயற்சியும் எம்மைக் கவர்ந்ததில் வியப்பில்லை. 1990 இல் நிலவறை கோவிலில் வழிபாட்டுடன் ஆரம்பித்த பயணம் இன்னமும் தொடர்கிறது. எதையும் புதுமையாய் செய்யும் பண்பும் திறமையும் குருக்களிடம் கண்டது ஆளுமையின் ஒரு படியாகவே எண்ணு கிறேன்.
இன்று கலாசார மண்டபம் நூலகம் என கோவிலின் கட்டமானங்களை நிறுவி மக்களுக்கு சேவை செய்வது மிகப்பெரிய பணியாகிறது.ஆலயம் அமைத்து,மக்களுக்கு பயன்படும் படியான சமய தெய்வீகப்பணியாற்றும் ஹம் ஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் 60 வது சஷ்டியப்த பூர்த்தி விழாவை கோலாகலமாகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. நல்லெண்ணமும் நற்சிந்தனையும் உள்ள குருவின் ஆசி, எல்லோருக்கும் கிடைக்க வேண்டி, பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழவேண்டுமென வாழ்த்துகிறோம்.

# ஈழத்தின் சிறந்த நாதஸ்வரக்கலைஞருக்கு "தங்க நாதஸ்வரம்" வழங்கி கௌரவிக்கும் வழக்கம் மாவிட்டபுரம் திருத்தலத்தில் இருந்தது!

– மயூரகிரி சர்மா இலங்கை



இலங்கையில் முதல் ராஜகோபுரம்

மாவிட்டபுரம் திருத்தலம் பொது யுகத்துக்குப் பின் (கி.பி) 789 ஆம் ஆண்டு (8 ஆம் நூற்றாண்டு) மன்னர்களால் கட்டப்பட்டது.

--

அப்பொழுது மதுரையரசன் திசையுக்கிரப் பெருவழுதியின் ஆணையால் சிதம்பர தீக்ஷிதரான பெரியமனதுள்ளார் மாவிட்ட புரத்துக்கு அழைத்து வரப்பெற்றார்.

--

இவ்வாறு இலங்கையின் அர்ச்சக- சிவாச்சார்ய பாரம்பரியத்தின் மூல வித்தாக திகழும் திருத்தலம் இது.

--

இலங்கையில் ஆதீன பாரம்பரியத்தின் முன்னோடியான மாவை ஆதீனம் இத்தலம் சார்ந்தது. அது ஆயிரத்து இருநூறாண்டு வரலாற்றுத் தொடர்ச்சியுடையது.

--

1980 களுக்கு முன் இக்கோயில் இருந்த உயர் நிலை எண்ணும் தோறும் வியப்பூட்டுவது. அது போர்- வலி வடக்கு இடப்பெயர்வு- பேரழிவு - தொடர்ச்சியாக பல ஆண்டுகள் ஊருக்குள் மக்கள் நுழைய இயலாத நிலை போன்றவற்றால் பெரிய அழிவை சந்தித்தது.

--

அக் காலத்தில் இக்கோயிலில் ஆண்டு தோறும் ஈழத்தின் சிறந்த நாதஸ்வரக்கலைஞருக்கு "தங்க நாதஸ்வரம்" வழங்கி கௌரவிக்கும் வழக்கம் இருந்ததாம்.

--

இலங்கையில், தவில்- நாதஸ்வர இசை முதன்முதலில் தோன்றிய தலம் இதுவே என்பர்.

--

பெரும் பூச்சப்பரச் சோடனைகள் இங்கு தானாம் உருவாயிற்று.

--

வட மாகாணத்தில், மின் ஒளியூட்டப்பட்ட முதற் கோயில் இது.

--

இலங்கையில் முதல் ராஜகோபுரம், முதல் வெள்ளிக் கொடிமரம் என்று இந்த மாவைப்பெருங்கோயில் பொலிவுற்றது.

--

அக்காலத்தில், தங்கத்தாலான முத்துக்குமார சுவாமி விக்கிரகம் ஒன்றும் இருந்திருக்கிறது.

--

இவ்வாறாக,ஈழத்தின் வேத சிவாகம மரபுத்திருத்தலங்களில் தலைமைத்தலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலே விளங்கியிருக்கிறது.

--

பண்டிதமணி அவர்களும் "ஈழ வள நாட்டில் வேதாகம சம்பந்தமான ஒரே ஒரு கந்தன் கோயில் இ∴தொன்றே என்று ஒரே ஒரு விரலை மட்டும் மடிக்கத்தக்க வகையில் முதன்முதல் அமைந்தது மாவிட்டபுரம்" என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

--

இடையில் ஏற்பட்ட இடர்களை அகற்றி, தற்போதைய ஆதீன கர்த்தர் மஹாராஜஸ்ரீ ஷ. இரத்தினசபாபதி தீக்ஷிதரும், அவரது குமாரர் திருப்பரங்குன்றத்தில் முறையாக வேதாகமங்களை பயின்ற ஞானஸ்கந்தசர்மாவும் மீண்டும் திருக்கோயிலை பழைய நிலை நோக்கி திருப்ப பெருமுயற்சி செய்கிறார்கள்.

--

பெரிய பெரிய சுதை வடிவங்கள், நெடிதுயர்ந்த மதில்கள், என்று பழைய பெரு வடிவத்திலேயே கோயில் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

--

பழைமையான மகோத்திர மகாரதம் யுத்தகாலத்தில் அழிவடைந்ததால், சென்ற 2019 ல் அதை விட உயரமாக, தனித்துவமாக மகோத்திரப் பெருந்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டிருக்கிறது.

--

மாவைப்பெருமானை பாடாத யாழ்ப்பாணப்புலவர் இல்லை என்ற அளவுக்கு இப்பெருமான் பேரில் பல்வேறு பிரபந்தங்கள் நிரம்பவே இருக்கின்றன.

**அருணகிரியார் காலத்தில் இத்தலம்**
**அருக்கொணாமலை என வழங்கியது என்றும்,**
**அவ்வாறே திருப்புகழ் அருளினார் என்றும்**
**ஒரு குறிப்பும் உண்டு.**



தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளையின் குறிப்பும் (நகுலேசுவரம் அருகில்) அவ்வாறே கருதுவதாக உணர முடிகிறது.

--

துரகானன விமோசன புரி என்றும் போற்றப்படும் இத்தலம் மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசியின் குதிரை முகம் (மாமுகம்∴ துரகானனம்) காட்டிய குன்ம நோய் விலகிய தலம்.

--

அது மட்டுமல்ல, இந்து மகா சமுத்திரத்தில், சூரபதுமனான மா மரத்தை அறுத்து வெற்றி பெற்ற வெற்றி பெருமான் எழுந்தருளிய மகா ஸ்தலம்.

--

இந்த பெரிய கோயிலில் நடைபெற்று வரும் மஹா உத்ஸவ மத்தியில் கோயில் உட்பிரகாரத்திலே பேச கிடைத்த வாய்ப்பை பேறாக கருதி மகிழ்கிறேன்.

--

மாவைப் (மாவிட்டபுரம்) பெருங் கோயிலில் சென்ற ஆண்டு "இலங்கையில் உள்ள ஆலயங்கள்" என்ற நூலுக்கு வெளியீட்டுரை ஆற்றும் போது குறிப்பிட்ட சில விடயங்கள்..



சிவத்தமிழ் தரணியில்
அகமும் புறமும் ஆலயம் அமைத்து
உலகம் செழிக்கும் வண்ணம்
என்றும் மலர வாழ்த்துகின்றோம்.

சமூகசேவகர் திரு.கதிர்காமத்தம்பி அவர்கள்
நெதர்லாந்து.



பக்குவத்திருமணி
சிவஶ்ரீ பாஸ்கரக்குருக்கள்
அவர்களின் மணிவிழா
சிறக்க வாழ்த்துகள்



20 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைவருக்கும் எங்கள்
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அனைத்து நகைகளும்
நம்பமுடியாத விலைக்கழிவில்.
செல்வராஜா
Selvaraja Gold House
£500 பவுண்ஸ்களுக்கு மேல் நகை வாங்கும் அனைவருக்கும்
ஒரு அதிஸ்ட்ட குபேரன் இலவசம்.
CELEBRATING
20
SUCCESSFUL YEARS
புத்தம் புது டிசைன்களை அள்ளி வழங்கிக்கொண்டு இருக்கும்.
Selvaraja Gold House
162 b Mitcham road | London | sw 17 9NJ
Tel: 0208 767 3795 | 078 25 005 269




பக்குவத்திருமணி
சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்
அவர்களின் மணிவிழா
சிறக்க வாழ்த்துகள்